மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 12 வியாழக்கிழமை (26.06.2008)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 211

# கொழும்பு வரும் மன்மோகனுக்கு இந்தியப் படைகளே பாதுகாப்பு

## இலங்கை அரசுக்குபுதுடில்லி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 26



'சார்க்' உச்சிமாநாட்டில் பங்குபற்றுவதற்காக அடுத்த மாத இறுதியில் கொழும்புக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் வருகை தரும்போது அவருக்கான பாதுகாப்பையும், அவர் பங்குபற்றும் நிகழ்வுகளுக்கான பாதுகாப்பையும் நேரடியாக இந்தியப் படைகளே கொழும்பில் பிரசன்னமாகி வழங்கும் எனத் தெரிகின்றது.

இது தொடர்பாக இலங்கை - இந்திய உயர்மட்டங்களிடையே ஏற்கனவே இணக்க உடன்பாடு எட்டப்பட்டிருப்பதாகவும் தெரிகின்றது.

'சார்க்' மாநாட்டை ஒட்டி கொழும்பில் இந்தியப் பிரதமருக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கான முன்னேற்பாடுகளைக் கவனிப்பதற்கு இந்திய உயர்மட்டப் பாதுகாப்புக் குழு ஒன்று இன்னும் ஏழு, எட்டு நாள்களில் கொழும்பு வர இருக்கின்றது.

அக்குழு கொழும்பு வந்து இடங்களையும், மற்ற விவரங்களையும் ஆராய்ந்த பின்னர், பிரதமர் மன்மோகன் சிங்கின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகக் கொழும்புக்கு அழைக்கப்பட வேண்டிய இந்தியப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 26

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறமாட்டாது என்று யாழ்.சிவில் நிர்வாக அதிகாரி மேஜர் அனுர தெரிவித்தார்.

கப்பலில் திருத்த வேலைகள் இருப்பதாக கப்பல் நிர்வாகம் அறிவித்துள்ளதாகவும்-

இன்று திருகோணமலையில் இருந்து புறப்படும் கப்பல் நாளை காங்கேசன்துறை வந்தடையும் என்றும்- அவர் தெரிவித்தார்.

பயணிகள் நாளை யாழ்.ரயில் நிலையத்தடிக்கு வந்து பயணத்தை மேற்கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-01)

## மணலாறில் நேற்று விமானக் குண்டுவீச்சு

கொழும்பு, ஜூன் 26

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் நேற்று விமானப்படையின் கிபிர், எம்.ஐ.24 ரக ஹெலிக்கொப்டர்கள் குண்டுவீச்சு மற்றும் ரொக்கட் தாக்குதலை நடத்தியுள்ளன என்று கூறப்பட்டது.

மணலாறு பகுதியில் இருந்து மூன்று கிலோமீற்றர் தொலைவில் உள்ள விடு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண விளையாட்டுப் போட்டிக்கு வவுனியா நோக்கி சென்ற மாணவர்கள் திருமலையுடன் திரும்புகிறார்கள்

### பாதுகாப்புக் காரணங்களால் ஒத்திவைப்பு

திருகோணமலை,ஜூன் 26

வவுனியாவில் நளை மறுதினம் ஆரம்பமாகவிருந்த மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றச் சென்ற யாழ்.மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் திருமலையுடன் யாழ்ப்பாணம் திரும்புகின்றனர்.

பாதுகாப்புக் காரணங்களால் விளையாட்டுப் போட்டிகள் பிற்போடப் பட்டதாலேயே இவர்கள் திருமலையுடன் திரும்புவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகள் வவுனியாவில் நாளை மறுதினம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரிசி விலையை 60 ரூபாவாக குறைக்க ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஜூன் 26

அரிசியின் விலையை - உடனடியாக - அடுத்த வாரம் முதல் அறுபது ரூபாவாகக் குறைப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்ற உணவு, பாதுகாப்பு மற்றும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மருத்துவ பீடத்துக்கு சிங்கள, முஸ்லிம் மாணவர்களும் இம்முறை அனுமதிக்கப்படுவர்

### பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் தகவல்



யாழ்ப்பாணம்,ஜூன் 26

யாழ்.மருத்துவ பீடத்திற்குரிய முழுக் கோட்டாவையும்- நூறு மாணவர்களையும்- அனுமதிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இன விகிதாரசார அடிப்படையில் மாணவர்களை அனுமதிக்க ஏற்பாடு செய்யப்பட்டால் மட்டுமே நூறு பேரை இங்கு அனுமதிப்பது சாத்தியமாகும்.

யாழ்.மருத்துவ பீடத்துக்கு இம்முறை அனுமதி பெறவுள்ள சிங்கள, முஸ்லிம் மாணவர்களுடன் யாழ்ப்பாணம் வரவிருக்கிறேன். அந்த மாணவர்களை பல்கலைக் கழகத் துணைவேந்தரின் பொறுப்பில் ஒப்படைக்கவுள்ளேன்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தெஹிவளை, வத்தளைப் பகுதிகளில் தமிழ் இளைஞர்கள் மூவர் கடத்தல்

கொழும்பு, ஜூன்24

தெஹிவளை மற்றும் வத்தளைப் பகுதிகளில் மூவர் கடத்தப்பட்டிருக் கின்றனர் என்று மனோகணேசன் எம்.பியிடம் முறையிடப்பட்டிருக்கிறது.

கடந்த 24 ஆம் திகதி தெஹிவளை, ஜெயசூரிய மாவத்தையில் வசித்த 21 வயதுடைய அருள்நாதன் விசாகன் என்பவர் கடத்தப்பட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுங்கேணியில் அமுக்க வெடியில் சிக்கி மாணவன் பலி; நான்கு பேர் படுகாயம்

வவுனியா, ஜூன் 26

வவுனியா மாவட்டத்தில் உள்ள நெடுங்கேணிப் பகுதியில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் பிரிவினரால் புதைத்து வைக்கப்பட்டதாகக் கூறப்படும் அமுக்க வெடியில் சிக்கி மாணவர் ஒருவர் உயிரிழந்தார். இச்சம்பவத்தில் மேலும் நான்கு பேர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நெடுங்கேணி குளவிசுட்டான் பகுதியில் உள்ள அன்னதேவன் மடுவடியில் நேற்றுப் புதன்கிழமை காலை சுமார் 9.30 மணியளவில் ஆழ ஊடுருவும் அணியினர் புதைத்த இந்த அமுக்க வெடி வெடித்ததாகக் கூறப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்தால் மட்டுமே இனிமேல் அமைதிப் பேச்சு என்கிறது அரசு

### யுத்தத்தை நிறுத்துமாறு இந்தியா கூறவில்லையாம்

கொழும்பு, ஜூன்26

புலிகள் ஆயுதங்களை கீழே வைக்காத வரை அவர்களுடன் அமைதிப் பேச்சில் ஈடுபடுவதில்லை என்ற நிலைப்பாட்டில் அரசு தொடர்ந்தும் உறுதியாக இருப்பதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளுடன் அரசு பேச்சில் ஈடுபட வேண்டும் என்று இந்தியா விரும்பினாலும் கூட அரசின் இந்த நிபந்தனையை புலிகள் ஏற்காவிட்டால் இந்தியாவின் விருப்பம் நிறைவேறாது என்றும், யுத்தம் தொடர்ந்த வண்ணமே இருக்கும் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தனவே மேற்படி தகவலைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அந்திரக்ஸ் பீதியால் நேற்று அமெ. தூதரகம் மூடப்பட்டது

கொழும்பு, ஜூன் 26

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் முதல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தூதரக வளாகத்தில் கிடந்த பொதி ஒன்றுக்குள் மர்மமான தூள் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. பொதிக்குள் இருந்த தூள் அந்திரக்ஸ் தூளாக இருக்கலாம் என்ற அச்சத்திலேயே தூதரகத்தை இழுத்து மூடியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

மேற்படி தூளைப் பரிசோதனைக்கு அனுப்பியிருப்பதாகவும் பரிசோதனை

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நன்றி நவில்கின்றோம்



இராசுவான் குறிச்சி அச்செழு
அன்ன ஞான வயிரவர் தேவஸ்தான
புனர்நிர்மாணப் பணிக்காக நிதி
உதவி வழங்கிய வடமாகாண
விசேடசெயலணித் தலைவரும்,
சமூகசேவைகள் மற்றும் சமூக
நலத்துறை அமைச்சரும் ஈ.பி.டி.பி.
கட்சி செயலாளருமான

**திரு.க.நி.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கு அச்செழு வாழ் மக்களின் சார்பிலும் எமது ஆலயத்தின் சார்பிலும் எமது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபையினர்.** (75736)

## நன்றி நவிலல்



அமரர்

**Dr.ஜயாத்துரை ஜோதிதாஸ் Ph.D.**

சாவகச்சேரி, தேவாலய வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி V.N.ஜயாத்துரை அவர்களின் மகன் Dr.A.ஜோதிதாஸ் அவர்கள் 14.06.2008 இல் சிங் கப்பூரில் காலமான பாரமான செய்தியைக்கேட்டு எங்களிடம் வருகை தந்தும் கடிதங்கள், தந்திகளுக்கூடாகவும் எங்களை ஆற் றித்தேற்றி பலவிதமான உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், தென்னிந்திய திருச்சபையைச் சார்ந்த குருமார்கள், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை மருத்துவர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மானிப் பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை மருத்துவர்கள், உத்தி யோகத்தர்கள், ஊழியர்கள், இணுவில் மக்லியோட் வைத்திய சாலை மருத்துவர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மானிப்பாய் HNB வங்கியைச் சார்ந்தவர்கள் மானிப்பாய் தெற்கு கிராம உத்தியோகத்தர், வெள்ளவத்தை HNB முகாமையாளர் யாவருக்கும் எங்கள் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி K. டேவிட் இரத்தினநாதன்
ஆசிரியை, நவீல்ட் பாடசாலை, கைதடி.(அருட்சகோதரி)
Dr.V. டேவிட் இரத்தினநாதன்
பதில் யாழ்.பிராந்திய பல் வைத்திய அதிகாரி
லோட்டன் வீதி, மானிப்பாய். (75737)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 24.10.1961

மறைவு:25.06.2006

**மயில்வாகனம் சுரேந்திரநாதன் (சுரேஸ்)**

(காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - சாவித்திரி தம்பதியினரின் கடைசிப் புதல்வன், வசாவிளானைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

புன்னாலைக் கட்டுவன்
ம.தற்பரநாதன் (அண்ணா),
த.பரமாவதி (மைத்துனி).

பறாளாய் வீதி,சுழிபுரம்
வை.தர்மபாலச்சந்திரன் (மைத்துனர்),
த.இராஜேஸ்வரி (அக்கா).

(75738)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
செல்வி அ.அருள்மொழியின் அன்புத் தந்தை

**இளையதம்பி அருளானந்தம்**

அவர்கள் சிவபதமெய்தியதையிட்டு எமது இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள்,
யா/இடைக்காடு மகா.வித்தி., அச்சுவேலி.

## தலைவெட்டப்பட்ட நிலையில் குடும்பஸ்தரின் சடலம் சுருவில் வீதியில

யாழ்ப்பாணம், ஜூன்26

ஊர்காவற்றுறை நீதிமன்றத்துக்குச் சமீப மாக சுருவில் வீதியில் குடும்பஸ்தர் ஒரு வரின் சடலம் தலை வெட்டப்பட்ட நிலை யில் நேற்று மீட்கப்பட்டது.

ஊர்காவற்றுறை, மெலிஞ்சி முனை யில் வசித்து வந்த பரராஜசிங்கம் குகன் (வயது 33) என்பவரின் சடலமே தலை துண்டிக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட் டிருக்கிறது.

விசுவமடுவைச் சேர்ந்த கொலையு ண்ட பரராஜசிங்கம் குகன் கடந்த நான்கு வரு டங்களாக மெலிஞ்சி முனையில் தங்கி யிருந் தார் என்றும் அவர் மூன்று பிள் ளைகளின் தந்தை என்றும் விசாரணையில் தெரிவிக் கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவன் விசாரணைகளை நடத்தினார்.

தாம் பணிபுரியும் கராஜில் வேலை செய்து விட்டு வீடு நோக்கி புறப்பட் டவர் பின்னர் நேற்றுக் காலை சடலமாக மீட்க் கப்பட்டார் என விசாரணையில் தெரிவிக் கப்பட்டது.சடலத்தை யாழ். ஆஸ்பத் திரிக்கு அனுப்புமாறு நீதி வான் உத்தரவிட் டார். (அ-01-203-25-78)

## குடத்தனை குடும்பஸ்தரை காணவில்லை என முறைப்பாடு

யாழ்ப்பாணம் ஜூன் 26

குடத்தனை வடக்கைச் சேர்ந்த குடும் பஸ்தர் ஒருவரை கடந்த 21ம் திகதியில் இருந்து காணவில்லை என மனித உரி மைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவல கத்தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த வரதராஜா கலைக்கண்ணன் (வயது28) என்பவர் கடந்த 21 ஆம் திகதி மீன் வியாபாரத் துக்குச் சென்றவர் என்றும் நேற்றுவரை வீடு திரும்பவில்லை என்றும் அவரது மனைவி மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார். (அ-1-25)

## புலிகளின் 5 சடலங்கள் செவ்வாயன்று ஒப்படைப்பு

வவுனியா, ஜூன்26

வன்னிக் களமுனைகளில் உயிரிழந்த விடுதலைப் புலிகளுடையவை எனத் தெரிவித்து ஐந்து சடலங்களை நேற்று முன்தினம் இரவு வவுனியா வைத்திய சாலையில் இராணுவத்தினர் ஒப்படைத் துள்ளனர்.

வவுனியா வைத்தியசாலைக்கு நேற் றுச் சென்று சடலங்களைப் பார்வையிட்ட வவுனியா நீதிவான் எம்.வை.எம். இஸத் தீன் சடலங்களை செஞ்சிலுவைச் சர்வ தேசக் குழு ஊடாக உரிய தரப்புகளிடம் ஒப்படைக் கும்படி பொலிஸாருக்கு உத்தர விட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

### தேவை

1. மில் வேலையில் அனுபவம் உள்ளவர், பழக விரும்புவர்கள்
2. மோட்டார் சைக்கிள் சுத்திகரிப்பில் அனுபவம் உள்ளவர், பழக விரும்புவர்கள்.

**தொடர்பு: பிருந்தா மில்ஸ்**
N-18,றக்கா றோட், யாழ்ப்பாணம்.
Tel.: 9201

### உடன் தேவை

புறொயிலர், கல்பேட், ஊர்ச்சேவல் என்பன உடன் தேவை. கூடுதல் விலைக்கு கொள்வனவு செய்யப்படும்.
**தாசன் பாம்**
158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

### தவறிவிட்டது

தர்மகுலசிங்கம் தாட்ஷாயினி என்பவரது தேசிய அடை யாள அட்டை (907093329v) கே.கே.எஸ். வீதி, மருதனார் மடத்தில் உள்ள ஆஞ்சநேயர் ஆலயத்தில் தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ் வரும் முகவரியில் தந்துதவவும்.
141/2, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0779297316 (75735)

## வேர்ள்ட் விஷன் லங்கா

### நிலக்கடலை தேவை

மனிதாபிமான சமூகப்பணிகளில் ஈடுபட்டிருக்கும் எமது நிறு வனத்திற்கு வாழ்வாதாரத் திட்ட நடைமுறைப்படுத்தலுக்காக, தரமான விதைப்பதற்கு உகந்த நிலக்கடலை தேவையாக உள்ளது. வழங்கக் கூடியவர்கள் உடனடியாக கீழ்வரும் முகவரியு டன் தொடர்பு கொள்ளவும்.

**வேர்ள்ட் விஷன் லங்கா**
இல. 227, 3ஆம் குறுக்குத் தெரு, [illegible]
தொலைபேசி இல.: 021 222 8223

### மென்பந்தாட்டம்

மாலிச்சந்தி மைக்கல் விளை யாட்டுக்கழகம் நடத்தி வரும் மென் பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி யின் அரையிறுதி ஆட்டத்தில் இன்று பி.ப. 3 மணிக்கு திருநாவ லூர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புலோலி குரும்பை கட்டி உதயசூரியன் வி[illegible] [illegible] மோது கின்றது. (01-218)

## சுன்னாகம் மின் நிலையத்துக்கு மின்பிறப்பாக்கிகள் வந்து சேர்ந்தன

சுன்னாகத்தில் அமைக்கப்பட்டு வரும் மின் நிலையத்துக்கான ஆறு மின் பிறப்பாக்கிகளும் சீனாவில் இருந்து கப்பல் மூலம் காங்கேசன் துறைக்கு நேற்று எடுத்து வரப்பட்டுள்ளன. இந்த மின் பிறப்பாக்கிகளை காங்கேசன்துறையில் இருந்து சுன்னாகத்திற்கு எடுத்துச் செல்லும் போது அந்தப் பகுதியில் நாளை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின்சார சபை அறிவித்துள்ளது.

கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ள மின்பிறப்பாக்கிகள் 'கொன்ரயினர்' களில் எடுத்துவரப்படுவதால் வீதிகளில் மேல் உள்ள மின் வயர்கள் அகற்றப்படுமெனவும் அதன் காரணமாகவே மின்விநியோகம் தடைப்படும் எனவும் மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1)

## மரண அறிவித்தல்கள்

### கலாநிதி செல்லப்பா ஜெயரத்தினம்

(ஓய்வுபெற்ற உதவி விவசாயப்பணிப்பாளர், முன்னாள் பேரவை உறுப்பினர், யாழ். பல்கலைக்கழகம்)



கடந்த 24.06.2008 செவ்வாய்க்கிழமை அன்று காலமான எமது குடும்பத்தலைவர் கலாநிதி செல்லப்பா ஜெயரத்தினத்தின் இறுதிக்கியைகள் தவிர்க்க முடியாத காரணங் களால் முன்னர் அறிவித்தது போல் இன்று (26.06.2008) வியாழக்கிழமை நடை பெறமாட்டா. நாளை (27.06.2008) வெள் ளிக்கிழமை பி.ப.2 மணியளவில் நடை பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

சின்னப்பா வீதி,
நவாலி கிழக்கு, மானிப்பாய். (75739)

தகவல்:
குடும்பத்தினர்.

### இளையதம்பி அருளானந்தம்

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)



இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வதி விடமாகவும் கொண்ட இளையதம்பி அருளா னந்தம் நேற்று (25.06.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் செல்வரத்தினத்தின் பாசமிகு கணவரும் அருள்ஈசன் (தொழில் திணைக் களம், நாரஹேன்பிட்டி), அருள்மதி (சுவிஸ்), அருள்செல்வி (லண்டன்), அருள்மொழி (ஆசிரியை, யா/இடைக்காடு மகாவித்தி யாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மினி, சண்முக நாதன், சரஜென்மன் ஆகியோரின் அன்பு மாமனும் வலோசன், சதுர்ஷா ஆகியோரின் அன் புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2008) புதன்கிழமை பி.ப.1.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இடைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உற்வினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தேத்தாவடி,
இடைக்காடு. (75740)

தகவல்:
குடும்பத்தினர்
அ.செல்வரத்தினம் (மனைவி).

### திருமதி சுப்பிரமணியம் வள்ளிப்பிள்ளை

கச்சாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் வள்ளிப்பிள்ளை நேற்று (25.06.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் சுப்பிரமணியம் (செட் டியார்) அவர்களின் அன்பு மனைவியும், கணபதிப்பிள்ளை (தொழில்நுட்ப உதவியாளர்), காசிப்பிள்ளை, கந்தசாமி, நட ராசா, (ஜேர்மனி), அமரர் குமாரசாமி, காசிநாதன் (கனடா), தவ ராசா (ஜேர்மனி), அமரர் அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவசோதி (மருத்துவ தாதி, அரசினர் வைத்தியசாலை, அச்சுவேலி), வேலுப்பிள்ளை,அன்னலட்சுமி, யமுனாவதி (ஜேர்மனி), தில்லைநாயகி, யோகமலர் (கொழும்பு), பராசக்தி அம்மா (ஜேர்மனி), அருந்ததி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2008) வியாழக்கிழமை பி.ப. 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொற்புலவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் தெற்கு ,
கொடிகாமம். (சி-553502)

தகவல்:
குடும்பத்தினர்.

### இளையதம்பி கணபதிப்பிள்ளை

(குப்பிளான்)



குப்பிளான் கிராமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி கணப திப்பிள்ளை நேற்று (25.06.2008) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கமலாதேவி, இராசலட்சுமி, காலஞ்சென்ற தனலட்சுமி, பன் னிருலிங்கம்(ஜேர்மனி), விஜயலட்சுமி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவபாலசுந்தரம், தெட்சணா மூர்த்தி, நிரஞ்சலா(ஜேர்மனி), விஜயதாசன் (ஜேர்மனி) ஆகி யோரின் அன்பு மாமனாரும், செந்தமிழ்செல்வன், கிருஷ்ணா ஜினி, அருள்பிரிஜா (ஜேர்மனி), பிரதீப்(ஜேர்மனி), பமீரா, நிரான், பமீனா (ஜேர்மனி), ரக்ஷன், விஷ்ணுசன்(ஜேர்மனி) ஆகி யோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (26.06.2008) வியாழக்கிழமை முற்பகல் 11மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கும்பிளான் காடாகரம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

குப்பிளான். (75742)

தகவல்:
இ.சி.தெட்சணாமூர்த்தி
(மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 115 கிலோ மீற்றர் தூர முன்னரங்குகளில் உக்கிரமான சண்டை நீடித்து வருகிறது

## பாதுகாப்பு அமைச்சு செவ்வாயன்று விடுத்த அறிக்கையின் விவரம்

கொழும்பு, ஜூன்26

வடபகுதியை விடுதலைப் புலிகள் பிடியிலிருந்து விடுவிப்பதற்காகப் படையினர் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பிரதேசங்களில் இராணுவத்தினர் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் அதே வேளை கடற்படையினர் விடுதலைப் புலிகளின் கடல்மார்க்கத் தொடர்புகளை தடுத்து வருவதாகவும் விமானப் படையினர் வன்னிப் பிரதேசத்தின் உள்ளே இருக்கும் விடுதலைப் புலிகளின் முக்கிய தளங்களை அழித்து வருவதாகவும் பாதுகாப்பு அமைச்சு கடந்த செவ்வாய்க் கிழமை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் களமுனையில் 12 கிலோ மீற்றர் நீளமான இராணுவ முன்னரங்கப் பகுதிகளில் கிளாலி, முகமாலை மற்றும் நாகர்கோயில் ஆகிய மும்முனைகளில் விடுதலைப் புலிகள் மீது படையினர் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிடுகின்ற அந்த அறிக்கை நாட்டின் மேற்கே மன்னார்க் கரையோரத்தில் இருந்து வடகிழக்கே உள்ள கொக்குத்தொடுவாய் கடலோரம் வரையான 115 கிலோ மீற்றர் தொலைவான வன்னிப் பிரதேச முன்னரங்கப் பகுதிகளில் உக்கிரமான சண்டை இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளது.

வன்னிப் பிரதேச முன்னரங்கப் பகுதிகளில் மன்னார், வவுனியா, வெலிஓயா ஆகிய மும்முனைகளில் அரசுப் படைகளின் மூன்று டிவிஷன்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான சண்டைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மன்னார் போர்முனையில் இத்திக்கண்டல், முள்ளிக்கண்டல், மாதோட்டம் ஆகிய பகுதிகளைக் கைப்பற்றியுள்ள விசேட அதிரடிப் படையினர், விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் பலவற்றை அழித்து அவர்களுக்கு பெரும் சேதங்களை ஏற்படுத்தியிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருக்கிறது.

யாழ்-கண்டி வீதியாகிய ஏ-9 வீதிப் பகுதியில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தின் 57 ஆவது படைப் பிரிவினர் மடுமுகாம், மடுக்கோயில் அடங்கலாக பாலம்பிட்டி நகரையும் மூன்று முறிப்பு-மற்றும் பெரியமேடு கிராமப் பகுதிகளை உள்ளடக்கிய 622 சதுர கிலோ மீற்றர் பரப்பளவை கொண்ட பகுதியையும் கைப்பற்றி உள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை மேலும் கூறுகிறது.

வடக்கே முல்லைத்தீவு, வனாந்தரம் பகுதியில் உள்ள விடுதலைப்புலிகளின் பிரதான தளத்துக்கும் கிழக்கு மாகாணத்துக்கும் இடையே விடுதலைப்புலிகளுக்கு இருந்து வந்த தொடர்புகளை வெலிஓயா பகுதியில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தின் 59 ஆவது படைப்பிரிவு துண்டித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தனதுஅறிக்கையில் தெரிவித்துள்ளது.

வெலிஓயா பிரதேசத்தின் ஜனகபுர, கிரிப்பன்வெல, ஆண்டான்குளம், கொக்குத்தொடுவாய் ஆகிய பகுதிகளில் இருந்து இராணுவத்தினர் விடுதலைப்புலிகளின் தளங்களை நோக்கி முன்னேறி வருவதாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் விவரித்துள்ளது. (அ-02)

## கொழும்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள 'சலனசித்திரம்' ஸ்தாபகருக்கு நீதிபெற்றுத்தரக் கோரிக்கை

கொழும்பு ஜூன் 26

கொழும்பு குண்டுவெடிப்புச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் கைது செய்யப்பட்டுள்ள கரவெட்டியைச் சேர்ந்த 'சலன சித்திரம்' அமைப்பின் ஸ்தாபகரும் தமிழ் சினிமாத்துறை இயக்குநருமான தேவதாஸுக்கு நீதி பெற்றுத் தருமாறு கோரப்பட்டுள்ளது.

அவரது சகோதரன் ஜெகதீஸ் இந்தக் கோரிக்கையை பிரதி அமைச்சர் பெ.இராதாகிருஷ்ணனிடம் விடுத்துள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி ஜெம்பட்டா வீதியில் அமைந்துள்ள தங்குமிடத்திலிருந்து கடத்தப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்ட 'சலன சித்திரம்' அமைப்பின் ஸ்தாபகரும், தமிழ்கலைத்துறை வாசியுமான கனகசபை தேவதாஸ் (வயது - 53) தற்போது குற்றப்புலனாய்வுப் பிரிவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிய வந்துள்ளதாக அவரது மூத்த சகோதரரான ஜெகதீஸ் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

தனது சகோதரன் காணாமல் போன செய்தி யாழ்ப்பாணத் தினசரியில் இடம் பெற்றிருந்ததையடுத்தே கொழும்புக்கு வருகை தந்தார் என்றும் - தேவதாஸின் மனைவி, பிள்ளைகள் கரவெட்டியில் வசித்துவருகின்றனர் எனவும் சகோதரர் மேலும் தெரிவித்தார். கலைத்துறையில் ஈடுபாடுகொண்டிருந்த சகோதரர் மீது சிங்கள நாளிதழ்கள் பாரதூரமான குற்றச்சாட்டுக்களை சுமத்தி எழுதி வருகின்றமை கவலையளிப்பதாகத் தெரிவித்த அவர், இவ் விடயத்தில் தனது சகோதரனுக்கு நீதியைப் பெற்றுத்தரும்படியும் பிரதியமைச்சரிடம் கோரியுள்ளார்.

தனது சகோதரன் 12ஆம் திகதி இந்தியாவிலிருந்து 'காதல் கடிதம்' திரைப்பட வேலைகளை முடித்துக்கொண்டு நாடு திரும்பியிருந்தபோதே கைது செய்யப்பட்டார் எனவும் சகோதரர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக உயர்மட்டப் பொலிஸ் அதிகாரிகளிடம் பிரதியமைச்சர் முறைப்பாடு செய்துள்ளார்.

## வலி.தென்மேற்கில் 30 பயனாளிகளுக்கு இயற்கைப் பசளை தயாரிக்கும் தொட்டிகள்

வலி.தென்மேற்கு, ஜூன்26

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 30 வீட்டுத்தோட்டப்பயனாளிகளுக்குஇயற்கைப் பசளை தயாரிக்கும் தொட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இப் பயனாளிகளுக்குப் பயன்தரு மரக் கன்றுகளும் வழங்கப்பட்டன.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் திட்டத் தினரால் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் சண்டி லிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதம விருந்தினராகவும், கீரிமலை கமநலச் சேவை நிலைய விவசாயப் போதனாசிரியர் திருமதி பரமேஸ்வரி மணிவண்ணன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

இயற்கைப் பசளை தயாரிக்கும் தொட்டி மூலம் இயற்கைப் பசளை தயாரிப்பது தொடர்பான பயிற்சிகளும், விளக்கங்களும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டன.

''நமது சூழலை நாமே பாதுகாப்போம்'' என்ற அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் திட்டத்தின் கீழ் இந்த இயற்கைப் பசளை தயாரிக்கும் தொட்டிகள் வழங்கப்பட்டன.

இப் பிரதேச விவசாயிகள் சம்மேளனங்களின் பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (202-735)

## யாழ்ப்பாணம் முனீஸ்வரன் வீதி மீண்டும் மக்கள் பாவனைக்கு

யாழ்ப்பாணம், ஜூன்26

யாழ்.முனீஸ்வரன் வீதி நேற்றுத் தொடக்கம் மக்கள் பாவனைக்கென மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

முனீஸ்வரன் வீதியில் புல்லுக்குளத்துக்கு முன்னால் போடப்பட்ட வீதித் தடை அகற்றப்பட்டு மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டது.

கடந்த சில மாதங்களாகப் போடப்பட்ட இந்த வீதித் தடையால் மக்கள் கந்தப்பர் சேகரம் வீதி மற்றும் ஆஸ்பத்திரி வீதி வழியாகவே முனீஸ்வரன் வீதிக்குச் சென்று அங்குள்ள நடைபாதைக் கடைகளுக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (202-224)

## ஊடகவியலாளர்களின் பிரச்சினைகளை ஆராய அமைச்சரவை உபகுழுவின் பணிகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 26

ஊடகவியலாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் அமைச்சரவை உபகுழுவின் அலுவலகம் கொழும்பு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபக் கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டு அதன் பணிகள் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

தினமும் காலை 8 மணி முதல் நள்ளிரவு 12 மணிவரை இந்த அலுவலகம் இயங்கும் என்றும் -

ஊடகவியலாளர்கள் தமது முறைப்பாடுகள் மற்றும் தகவல்கள் என்பவற்றை இந்த அலுவலகத்தில் தொடர்பு கொண்டு தெரிவிக்கமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த அலுவலகத்துடன் நேரடியாகவோ அல்லது 011- 2669128 மற்றும் 0602119241 என்ற தொலைபேசி இலக்கங்களுடனோ தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அமைச்சரவைக் குழுவில் அமைச்சர்களான கலாநிதி அமுனுகம, அனுர பிரியதர்ஷன யாப்பா, டளஸ் அழகப்பெரும, டாக்டர் ராஜித சேனாரத்ன, லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, ரோஹித்த அபேகுணவர்தன மற்றும் பாயிஸ் முஸ்தபா ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன்26

புத்தூர் மேற்கு கலைமதி வி.க. நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

* பி.ப.3.30 மணி-புத்தூர் வீனஸ் வி.க. எதிர் தொண்டைமானாறு கலைவாணி வி.க.
* பி.ப. 4.30 மணி - புத்தூர் தமிழ்மதி வி.க. எதிர் அச்செழு ஒளிநிலா வி.க. (-1)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்26

கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் யூனியன் அஸ்ஸூரன்ஸின் ஆதரவுடன் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சுதுமலை புவனேஸ்வரியம்பாள் வி.கவை எதிர்த்து இணுவில் அண்ணா வி.க. மோதும். (1-86)

## யாழ்.வலயத்திலுள்ள பார்வைக் குறைபாடுடைய மாணவர்களுக்குக் கண்ணாடி

நல்லூர், ஜூன்26

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகளில் கல்விகற்கும் பார்வைக் குறைபாடுடைய விசேட தேவையுள்ள மாணவர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் வைத்து மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு பிரதிக் கல்விப்பணிப்பாளர் த. இராசலிங்கம் தலைமையில் மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் உதவியுடன் நடைபெறும் இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களையும் தவறாது சமூகந்தந்து தமக்குரிய மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு விசேட கல்வி ஆசிரியஆலோசகர் ந. சந்திரிகா கேட்டுள்ளார். (202-111)

## பனை, தென்னை பொருள்கள் கொண்டு செல்லல் தொடர்பாக

காரைநகரிலிருந்து வெளியிடங்களுக்கு தென்னை, பனை பொருள்களான ஊமல், பனைமட்டை, தென்னைமட்டை, பனை ஓலை, தென்னோலை போன்றவற்றை துவிச்சக்கர வண்டி, மினிபஸ் மற்றும் பஸ்வண்டிகளில் கொண்டு செல்ல உதவி அரசாங்க அதிபரின் அனுமதி தேவையில்லை.

எனினும் இருசக்கர உழவு இயந்திரங்களில் பனை-தென்னை பொருள்களை கொண்டுசெல்லும்போது மட்டும் உதவி அரசாங்க அதிபரின் அனுமதி தேவை என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (202)

## மாகாண சபைத் தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் வெள்ளி முதல் ஏற்பு

கொழும்பு, ஜூன் 26

சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைத் தேர்தல்களுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் பணி எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது எனத் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அடுத்தமாதம் 4 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் சுயாதீன குழுக்கள் கட்டுப்பணம் செலுத்துவதற்கான கால எல்லை அடுத்த மாதம் 3 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் பணி பூர்த்தியானதும் தேர்தல் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இத் தேர்தலில் சப்ரகமுவ மாகாண சபைக்கு 42 உறுப்பினர்களும் வடமத்திய மாகாணசபைக்கு 32 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சியில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்26

வடமராட்சி பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் பிரிவில் 'லீட்ஸ்' நிறுவனத்தால் 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீட்டுத் திட்டம் பயனாளிகளுக்குக் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

'லீட்ஸ்' நிறுவனத்தின் யாழ்.மாவட்ட தலைமைப்பீட அலுவலர் ஜெகான் ஜே.செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். 'லீட்ஸ்' நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றொசான் மெண்டிஸ் பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் ஆகியோரும் விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

லீட்ஸ் நிறுவனத்தினால் முதல் கட்டமாக ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பயனாளிகள் 79 பேருக்கு இந்த வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

மேலும் ஒரு தொகுதி வீடுகள் அடுத்த மாதம் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (202-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபாய நோய்களுக்குக் காரணியாக விளங்கும் குடிப்பழக்கம்; உடல், உள பாதுகாப்பிற்கு அவற்றிலிருந்து விடுபடல் அவசியம்

சர்வதேச மது ஒழிப்புத் தினம் இன்றாகும். இதனையொட்டி இந்த ஆக்கம் வெளிவருகின்றது.

இன்றைய சூழலில் யாழ்.குடாநாட்டில் நிலவும் நெருக்கடிகள் காரணமாகவும் மக்கள் முகாம்களில் நெருங்கி வாழ்தல் காரணமாகவும் மது அருந்தும் பழக்கம் மக்களிடையே அதிகரித்து வருகிறது. இளைஞர்களே அதிகமாக இதற்கு அடிமையாகிறார்கள்.

குடிப்பவர்கள் தாம் குடிப்பதற்குப் பல காரணங்களைக் கூறுவர். இளைஞர் தமது நண்பர்களோடு கூடும்போது அவர்களின் வற்புறுத்தலையும், அழுத்தங்களையும் மறக்க முடியாமல் குடிக்கத் தொடங்கியதாகக் கூறுவர். இந்த இளைஞர்கள் குடியை ஆரம்பிப்பதற்கு இணங்கக் கூடாது. மறுத்துச் சொல்லப் பழகிக் கொள்ள வேண்டும். இல்லையேல் குடிக்கு அடிமையாகி, ஏழையாகி, நோயாளியாகி வாழ்வில் கஷ்டப்படும்போது இந்த நண்பர்கள் வந்து உதவப் போவதில்லை.

குடிபோதைக்கு அடிமையாகி தமது உடலையும் உளத்தையும் கெடுத்துக் கொள்பவர்கள் அவற்றின் கெடுதிகள், தாக்கங்கள் பற்றிய தகவல்களைப் பெற்று தமது வாழ்க்கை முறையை மாற்றி நல்லொழுக்கமான வாழ்வுக்குத் திரும்ப வேண்டும்.

### உடலில் ஏற்படும் பாதிப்புகள்

பசியை ஏற்படுத்த வேண்டுமென்று பலர் குடிக்கிறார்கள். ஆனால் மது போகப் போக பசியையே இழக்கச் செய்து உணவையே மறக்கச் செய்யும். இதனால் போசணைக் குறைபாடு, நோய் எதிர்ப்புச் சக்தி குறைவு படுதல், நோய்த்தொற்று முதலின ஏற்படுகின்றன.

பலவிதமான பாதிப்புகள் ஈரலுக்கு ஏற்படலாம் சிரோசிஸ் (Cirrhosis) என்பது முக்கியமான நோய் ஆகும். ஈரல் சுருக்கமடைந்து, கடினமாகி, கருகி மெல்ல மெல்லத் தனது தொழிற்பாடுகளை இழக்கிறது ஈரல் கலங்கள் நார்த்தன்மையாகி அழிகின்றன. மதுவைத் தொடர்ந்து அருந்தி வருவதால் ஏற்படும் சிரோசிஸ் காரணமாக உலகில் அதிக மரணங்கள் ஏற்படுகின்றன.

மதுவின் காரணமாக இரைப்பையில் அழற்சி, புண், புற்றுநோய் போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு எனக் கூறுகிறார்கள். உணவுக் கால்வாயில் குடியின் பாதிப்பாக இரத்தப் பெருக்கு ஏற்படலாம். வாய், தொண்டை ஆகிய உறுப்புகளில் புற்றுநோய் ஏற்படவும் சந்தர்ப்பமுண்டு.

சதையச் சுரப்பி (இன்சுலின் சுரப்பது) மதுவினால் படிப்படியாக அழிகிறது. திடீரெனச் சதைய அழற்சியும் ஏற்படலாம்.

மதுவினால் மூளை பலவழிகளிலும் பாதிப்புற்று உறுப்புகளுக்குச் செல்லும் நரம்புகள் பாதிக்கப்படுகின்றன. இதனால் அசைவும் புலனுணர்ச்சிகளும் பாதிக்கப் படுகின்றன. உடல் தசைகளும் பாதிப்புக் குள்ளாகின்றன.

இதயத்தின் தசைகளையும் மது பாதிக் கலாம் இதனால் நாட்பட்ட இதயநோய் ஏற்பட்டு இதயம் முற்றாக இயங்க முடியாத நிலைமை ஏற்படலாம். அதிக மதுவினால் அதி குருதி அமுக்கம் அதிகரித்து பாரிசவாதம் Stroke ஏற்படலாம்.

### உளத்தில் ஏற்படும் பாதிப்புகள்

ஒருவர் மதுவைத் தொடர்ந்து பலகாலம் குடித்துவர அவரது உடல் அதற்குப் பழக்கப்பட்டு 'சகிப்புத் தன்மை' ஏற்பட்டு விடுகிறது. இதனால் அதிகளவு மதுவை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். நிலைமை மோசமடைய மனக் கவலை அதிகரிக் கும். பின்னர் மனக் கவலை மறக்க என்று கூடிய அளவில் மதுவை அருந்து வார் அதிக மது நரம்புத் தொகுதியையே சோர்வுறச் செய்துவிடும். இதனால் மனச்சோர்வு உண்டாகி சந் தேகம், விரக்தி, துக்கம், பயம் என்பன ஏற்பட்டு துன்புறு வார். சாதாரண மக்களிலும் பார்க்க குடிப்பவர்களிடம் இந்த மனச் சோர்வு, பயம் என்பன ஐம்பது மடங்கு அதிகமாகக் காணப்படும் என அறியப் பட்டுள்ளது.



இதுவே சிலரில் தற்கொலை எண்ணத்தையும் தோற்றுவிக்கிறது.

மதுவினால் ஒருவரில் நடத்தை மாற்றம் ஏற்படுகிறது. இதை மற்றவர் விரும்பாத நிலையும் வெறுத்து ஒதுக்கும் நிலையும் ஏற்படலாம். பொது இடங்களில் தம்மைப்பற்றிப் புழுகுதல், அலுப்பூட்டுதல், வீண்சண்டைக்குப் போதல், கோமாளித் தனங்கள் போன்ற செயற்பாடுகள் அவரது மனைவிக்கு வெட்கப்படத் தக்க சூழ்நிலையை ஏற்படுத்தலாம். இத்தோடு அவரின் பாலியற்குறைபாடுகளினாலும் மனைவியுடன் பிரச்சினைகள் உருவாகும்; நிரந்தரப் பிரிவுகளும் ஏற்படலாம்.

### பிற உளவியற் குறைபாடுகள்

நீண்டநாள் மது அருந்துபவர்களில் குறுகியகால மறதி (Short term amnesia or memory black out) என்னும் ஒரு நிலை பெரும்பாலும் காணப்படும். மாலை வேளையில் எல்லோரிடமும் கதைத்துப் பழகிவிட்டு வீடு திரும்பிய ஒருவர் மறுநாள் காலையில் முதல் நாள் மாலை நடந்தவற்றை நினைவுக்குக் கொண்டுவர முடியாதவராக இருக்கும் நிலையே குறுகிய கால மறதி ஆகும். அவர் எப்படி வீட்டுக்குத் திரும்பி வந்தார் என்பதையே மறந்த நிலையில் இருப்பார். மது அருந்துவோரில் இருபது வீதமானவர்களில் இது காணப்படுகிறது. இந்த குறுகியகால மறதிநிலை அவருக்கும் அவரைச் சேர்ந்தவருக்கும் மிக ஆபத்தான நிலையாகும்.

### மதுப்பழக்கத்திலிருந்து விடுபட

குடியை விட விரும்புபவர்களுக்கு பல வழிகளிலும் உதவும் முறைகள் இருக்கின்றன. அவற்றில் முக்கியமானது குழுச் சிகிச்சை எனலாம். இம்முறையில் குடியை விட விரும்புவோர் குடியை விட்டவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதாகும். தாமும் குடியைவிட்டு இயல்பான அமைதியான வாழ்வுக்குத் திரும்பலாம் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. வாரத்திற்கு ஒரு குறிப்பிட்ட நாளில் குழுவாகச் சந்திப்பதன் மூலம் குடியை முற்றாகவே விட்டு விட வழி பிறக்கிறது.

குடியை விடும்போது வைத்தியரின் ஆலோசனையுடனே விட வேண்டும். அப்போதுதான் குடியை விட்டவுடன் ஏற்படும் டிலிரியம் றெமன்ஸ் (Dilirium trements மாயத் தோற்றங்கள் ஏற்படுதல் கைவிரல்கள் நடுங்குதல் வலிப்பு ஏற்படு தல் போன்ற ஒதுங்கல் அறிகுறிகளுக்கு உடன் வைத்தியசிகிச்சை அளிக்கமுடியும். ஒருவர் குடியை விடுவதற்கு அவரின் மனைவி, பிள்ளைகள் குடும்பத்தினர் அனைவரினதும் ஆதரவும் ஒத்துழைப்பும் மிகவும் தேவையாகவும் உதவியாகவும் இருக்கும்.

இவ்வித குழுச்சிகிச்சை யாழ்.போதனா வைத்தியசாலையில் உளநலப் பிரிவல் (32ஆம் அறை) ஒரு குறிப்பிட்டநாள் காலையில் நடைபெறுகிறது. குடியை எவ்விதம் விடலாம் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள் இதுபற்றி விசாரித்து, எவ்வித பயமுமின்றி நேரில் வந்து கலந்து கொள்ளலாம். இவர்கள் கதைகதையாகச் சொல்லும் விஷயங்கள் இவர்களின் மனைவிமார் சொல்லும் துன்பக் கதைகள் கண்ணீர்க் கதைகள் மிக இரகசியமாகவே வைக்கப்படும்.

ஒவ்வொருவரும் பொழுதைப் பயனுள்ள முறையில் செலவிடவேண்டும். சமயம், கால இலக்கியம், மீன்கள் பறவைகள் வளர்த்தல், பூந்தோட்டம் வீட்டுத் தோட்டம் போடுதல், விளையாட்டு, சமூக சேவை, வாசித்தல் போன்றவற்றில் ஈடுபடலாம் அதாவது எப்போதும் ஒருவர் தன்னை ஏதாவது வாழ்வை மேம்படுத்தும் பயனுள்ள ஒன்றில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

குடிபோதை, புகை அற்ற ஒரு அமைதியான சமுதாயத்தை நோக்கிய இந்த நீண்ட பயணத்தில், குடிப்பவர்கள் குடியை விடவேண்டும் என்ற விருப்பம் கொண்டு இணைந்துகொள்ள அணிதிரண்டு வர வேண்டும்.

**இர.சந்திரசேகர சர்மா**
முன்னாள், ஆலோசகர், குடிபோதைப் பொருள் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம் போருட்


## திருமண பொன் விழா வாழ்த்து



திரு.திருமதி
**பிலிப் பிலோமினா**
தம்பதிகள்

23.06.2008 அன்று திருமண வாழ்வின் 50 ஆண்டுகள் நிறைவு பொன்விழாக் கொண்டாடியஎமது அன்பின் டடி, மம்மி (திரு.திருமதி பிலிப் பிலோமினா தம்பதிகள்) ஆகியோருக்கு எமது இனிய வாழ்த்துக்களையும் இறைவனுக்கு மனமார்ந்த நன்றிகளையும் கூறி நிற்கின்றோம்.

பாஷையூர். கியோமர் குடும்பம்

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

996 நீலம்

வெற்றி இலக்கங்கள்

கன்னி **08 13 27 52**

24-06-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 4882164 - 4897685

ஜக்பொட் பரிசு ரூபா.3,994,950/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 344,005 | 10/- | 3,440,050/- |
| 2 இலக்கங்கள் | 31,579 | 20/- | 631,580/- |
| 1 இல. + லக்கினம் | 31,268 | 30/- | 938,040/- |
| 2 இல. + லக்கினம் | 2,873 | 100/- | 287,300/- |
| 3 இலக்கங்கள் | 848 | 500/- | 424,000/- |
| 3 இல. + லக்கினம் | 75 | 5,000/- | 375,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 3,994,950/- | 3,994,950/- |
| மொத்தம் | | | 10,390,920/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 410,657 | | 10,890,920/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல. 5783337 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2008 ஜூன் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா. 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| பொலன்னறுவை | 4896889-8-42 |
| குருநாகல் | 4888614-4-03 |
| மொனராகலை | 4890281-0-20 |
| திருகோணமலை | 4887436-7-08 |
| ஹம்பாந்தோட்டை | 4886659-3-11 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


# அரசு யுத்தத்தில் வெல்லமுடியாது என்பதை இந்தியா இப்போது நன்றாக உணர்ந்துள்ளது

கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண கருத்து

கொழும்பு, ஜூன் 26

''மஹிந்த ராஜபக்ஷவின் அரசிற்கு ஆயுதங்களை வழங்கி - கடல் பாதுகாப்பை வழங்கி - எவ்வளவோ உற்சாகமூட்டிய இந்தியா, தற்போது இந்த அரசு யுத்தத்தில் வெற்றி பெறாது என்பதை உணர்ந்துள்ளது. இந்தியத் தூதுக்குழுவின் திடீர் விஜயத்திற்கு இதுவும் ஒரு காரணம்.

- இவ்வாறு இடதுசாரிகள் முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

'இதன் காரணத்தினாலேயே இந்திய அரசு, சரியான தீர்வு யோசனைகளை முன் வைக்குமாறு இலங்கை அரசுக்கு அழுத்தத்தைக் கொடுத்திருக்கிறது' - என்றும் அவர் கூறினார்.

கொழும்பிலுள்ள இடதுசாரி முன்னணியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த அரசு ஒரு பக்கத்தில் யுத்தத்தை முன்னெடுத்து தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை அழிப்பதற்கு முயற்சி செய்கின்றது. மறுபக்கத்தில் ஏகாதிபத்தி நலன் சார்ந்த பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுத்து நாட்டை பேரழிவுக்குள் தள்ளுகிறது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பின்னடைவுக்கு அரசு, எண்ணெய் விலையேற்றத்தையும், யுத்தத்தையும் சாட்டுச் சொல்கிறது. உண்மையில் எண்ணெய் விலை அதிகரிப்பு சிறு அளவேயாகும். யுத்தமே நாட்டின் பொருளாதாரப் [illegible] வீழ்ச்சிக்குக் காரணியாக உள்ளது.

இலங்கை அரசிற்கு ஆயுத தளபாடங்களை வழங்கி, கடல் பாதுகாப்பை வழங்கி, உற்சாகமளித்த இந்தியா, தற்போது இலங்கை அரசு யுத்தத்தில் வெற்றிபெறாது என்பதை உணர்ந்துள்ளது. இதன் பிரகாரமே இந்தியா, இலங்கை அரசிற்கு சரியான தீர்வு யோசனையை முன்வைக்குமாறு அழுத்தத்தைக் கொடுத்திருக்கிறது. தமிழ் மக்களின் முழுமையான ஆதரவு விடுதலைப் போராட்டத்திற்கு உண்டு என்பது தற்போது நிரூபிக்கப் பட்டுள்ளது என்றார். (சி)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சிவபாக்கியம்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவபாக்கியம் 24.06.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் முன்னாள் அதிபர் அப்பாக்குட்டி சுப்பிரமணியம் அவர்களின் மனைவியும் அமரர் சசிகலா (முன்னாள் சிறாப்பர் பி.செ.,சாவகச்சேரி), திலகராஜ் (கிளை முகாமையாளர் M.P.C.S நீர்வேலி), உதயதாஸ் (விரிவுரையாளர் யாழ்.பல்கலைக் கழகம்), கோசலா (நோர்வே), குகதாஸ் (விரிவுரையாளர் யாழ்.பல் கலைக்கழகம்), சர்மிளா (லண்டன்), சியாமளா (ஆசிரியை மெலிஞ்சி முனை றோ.க.த.க.பாடசாலை, ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்புத் தாயும் நாகேஸ்வரி (ஆசிரியை யா/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்), தயாளினி (அமெரிக்கா), ஜெகதீஸ்வரன் (நோர்வே), உமா (டாக்டர் லண்டன்), மதன தீவன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் தேவகாந், பிரகாந், லக்ஷிகா, கம்ஷிகா, தனுகன், ரிஷபன், கரிஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கிழுவானை ஒழுங்கை,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(75683)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மல்லாகம் புனித சதாசகாய அன்னை ஆலயத்தில் அண்மையில் உறுதிபூசும் சடங்கு இடம்பெற்றது. இச்சடங்கில் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் குருக்கள் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுப்பதை முதலாவது படத்தில் காணலாம். யாழ்.ஆயர் சிறுவன் ஒருவருக்கு உறுதிபூசுதல் சடங்கை நிறைவேற்றுவதை இரண்டாவது படத்திலும் அருட்சாதனம் பெற்றுக்கொள்ளும் சிறுவர்களை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: நேசன்

'நிக்கொட்' திட்டத்தின் கீழ்

## குடாநாட்டில் 256 மில்லியன் ரூபா செலவில் 2ஆம் கட்ட அபிவிருத்திப் பணிகள் ஆரம்பம்

நல்லூர், ஜூன்26

யாழ்.குடாநாட்டில் இரண்டாவது கட்ட அபிவிருத்தி வேலைகளை 'நிக்கொட்' ஆரம்பித்துள்ளது. மாகாண ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இதற்கென ரூபா 256 மில்லியன் நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது.

கல்விப் பகுதிக்கான கட்டடப் பணிகளுக்கு 35 மில்லியன் ரூபாவும் சுகாதாரப் பகுதிக்கு 196 மில்லியன் ரூபாவும் வீட்டுத் திட்டத்திற்கு 15 மில்லியன் ரூபாவும் வீதிகளுக்கு 7 மில்லியன் ரூபாவும் கால்நடை அபிவிருத்திக்கு 4.7 மில்லியன் ரூபாவும் செலவிடப்படவுள்ளது.

நெடுந்தீவு, யாழ்.நகர்ப்பகுதி, சுழிபுரம், பருத்தித்துறை, சாவகச்சேரி, அச்சுவேலி, தெல்லிப்பழை பகுதிகளில் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளன.

தெல்லிப்பழையில் புற்றுநோய் சிகிச்சைப்பிரிவுக்கான புதிய 'எக்ஸ்றே' இயந்திரம் வழங்கப்படவுள்ளது. கால்நடை அபிவிருத்தியில் பத்து பால்விற்பனை நிலையங்களுக்கான உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் 'நிக்கொட்' வட்டாரம் தெரிவித்தது. (202-111)

## தென்மராட்சியில் மீன் எழுச்சித் திட்ட பயனாளிகளின் விவரம் திரட்டப்படுகின்றது

யாழ்ப்பாணம், ஜூன்26

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீள் எழுச்சித் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட கிராமங்களின் குடும்ப விவரங்கள் திரட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அந்தந்தக் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் ஆகியோரின் உதவியுடன் இப் பணியினை ஆரம்பித்துள்ளனர்.

குடும்பத் தலைவரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், பிரதான தொழில், இனம்/மொழி, அங்கத்தவர்களின் பெயர், பால், வயது, யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், கல்வி, வருமான மட்டம், தொழில் விசேட தேவைக்கு உட்பட்டோர், குடிதண்ணீர் வசதி, உட்கட்டுமான வசதி, கால்நடை வளர்ப்பு, வீட்டு வசதி, காணி, சொத்து வகை, பயிர்ச் செய்கை, கடன் ஆகிய விவரங்கள் திரட்டப்படுகின்றன. (202-207)

## பரிசளிப்பு நிகழ்வு

குருநகர், ஜூன்26

யாழ்.சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் திருமதி லூ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (202-51)

## யாழ்.பிரதேச கலாசார விழா

யாழ்ப்பாணம், ஜூன்26

யாழ்.பிரதேச கலாசாரப் பேரவை நடத்தும் கலாசார விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

பேரவையின் தலைவரும் யாழ்.பிரதேச செயலருமான ம.ஜெகூ தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

நிகழ்வில் கவியரங்கு, பட்டிமன்றம், இசை, நடனம், கோலாட்டம், 'இருள் தகர் கதிர்' நாடகம், 'சாம்பிராட் அசோகன்' நாட்டுக்கூத்து ஆகிய கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (202)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு

## தென்மராட்சியில் உள்ள உணவகங்களுக்கு இடையே போட்டிகள் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 26

உள்ளூராட்சி வாரத்தையிட்டு சாவகச்சேரி நகரசபையினர் சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள உணவகங்கள், சிற்றுண்டி நிலையங்கள், வெதுப்பகங்கள், மென்பான உற்பத்தி, குளிர்களி உற்பத்தி நிலையங்கள் ஆகியவையிடையே போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

சிறந்த முறையில் இயங்கும் நிலையங்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தெரிவித்தார்.

இந்த நிலையங்களைப் பரிசோதனை செய்வதற்கு நகர்ப்பகுதி பொதுசுகாதார பரிசோதகர் தலைமையிலான குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபையினால் வருடாந்தம் நடத்தப்படும் உள்ளூராட்சி வார நிகழ்வில் தெரிவு செய்யப்படும் உணவகங்கள், சிற்றுண்டி நிலையங்கள், வெதுப்பகங்கள், கூல்பார் போன்றவற்றுக்கு பரிசில் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை இவ்வருடம் நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் தொழில், வர்த்தக, வியாபார நிலையங்களின் உரிமையாளருக்கு இடையிலான பொது அறிவுப் போட்டியினை நடத்தவுள்ளதாகவும் இப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் தத்தமது பிரிவு கைத்தொழில் வணிகர் மன்றங்களூடாக எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் கேட்டுள்ளார். (202-207)

## மறவன்புலோ பகுதிக்கு தபால் விநியோகம் இல்லை; இதனால் பிரதேச மக்கள் சிரமப்படுகின்றனர்

யாழ்ப்பாணம், ஜூன்26

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ பகுதியில் தபால் விநியோகம் செய்யப்படுவதில்லை. இதனால் அப்பகுதி மக்கள் சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்திற்கு செல்ல வேண்டியுள்ளதாக முறையிடுகின்றனர்.

இப்பகுதியில் 2004 ஏப்ரல் மாதம் மக்கள் மீளக் குடியமர்ந்தனர். தற்போது 96 குடும்பங்கள் அங்கு வசித்து வருகின்றன.

2006 ஒகஸ்ட் மாதத்திற்குப் பின்னர் அப்பகுதி மக்களுக்கான தபால் விநியோகம் நிறுத்தப்பட்டது. இதனால் மக்கள் பத்து கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்திற்கு செல்லவேண்டியுள்ளதாக முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

தமது பகுதிக்கு மீண்டும் தபால் சேவையினை ஆரம்பிக்குமாறு தென்மராட்சிப் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர். (202-207)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச அபிவிருத்திக்கு 152 மில்லியன் ரூபா எம்.பிக்களால் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூன்26

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசத்தின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு 152.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் 21 வேலைத்திட்டங்களுக்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்திலிருந்து இந்த நிதியை ஒதுக்கீடு செய்துள்ளனர் என கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா 35 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 55 மில்லியன் ரூபாவும் பத்மினி சிதம்பரநாதன் 18.5 மில்லியன் ரூபாவும் மாவை சேனாதிராஜா 4மில்லியன் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர். (202)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன்26

புங்குடுதீவு மேற்கு, 4ஆம் வட்டாரம் பிட்டியம்பதி ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 30ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202)

* * *

நல்லூர், ஜூன்26

வரலாற்றுச் சிறப்புமிக்க நெடுந்தீவு மத்தி பெருக்கடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11மணிக்கு தேர்த்திருவிழாவும் அன்றையதினம் பிற்பகலில் தீர்த்த உற்சவமும் மறுநாள் பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். (202-111)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்26

காரைநகர் களபூமி திக்கரை முருகமூர்த்தி ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202-250)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்26

சாவகச்சேரி, கச்சாய்வீதி வீரபத்திரர் கோயில் அலங்கார உற்சவம் நேற்று புதன்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்தினங்கள் நடைபெறும். (202-207)

* * *

நல்லூர், ஜூன்26

நல்லூர் மூத்தவிநாயகர் கோயில் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை முற்கபல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202-111)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்26

ஆவரங்கால் சிவன் கோயில் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் இடம்பெறவுள்ளது.

தினமும் காலை 9 மணிக்கும் மாலை 3 மணிக்கும் உற்சவங்கள் ஆரம்பமாகி நடைபெறும்.

எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202)

* * *

நல்லூர், ஜூன்26

திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத்தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202-111)

* * *

சுழிபுரம், ஜூன்26

பண்ணாகம் ஆலடி வைரவப்பெருமாள் கும்பாபிஷேக தினம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் 108 அஷ்டோத்திர சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (202- 28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதடி விவசாயிகளுக்கு மண்வெட்டிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்26

கைதடி கமநல சேவைகள் நிலைய பிரிவுக்குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் விவசாயிகளுக்கு மண்வெட்டிகள் வழங்கப்பட்டு வருவதாக பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார்.

(202-207)


**Physics A/L - 2009**

✱புலங்கள்

ஆரம்பம் 27.06.2008 (வெள்ளி) 5-6p.m

**A/L - 2010**

✱பொறியியல் - நிலையியல்

ஆரம்பம் 28.06.2008 (சனி)

4.30 - 5.30 p.m

திரு.ம.ஸ்பெல்மன்

இடம்: M.S Center
No 18, அச்சுக்கூட வீதி,
கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
(பெரிய கோயில் அருகாமை)

Note : Group Class, persional Class எடுக்க விரும்பிய மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்


# ஊர்காவற்றுறை கோட்ட மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டிகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூன் 24

தீவகக் கல்வி வலயத்திற்குட்பட்ட ஊர்காவற்றுறை கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற தமிழ் மொழித் தினப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

**வாசிப்பு**

பிரிவு 1: ம.நிவேதிகா, (புனித மரியாள் ம.ம.வி.), பா.கவிதா (யாழ்ற்ரன் கல்லூரி), இ.இந்துஜா (நாரந்தனை றோ. க.வி.)

**வாசிப்பு**

பிரிவு 2: ச.வினுஜா (புனித மரியாள் ம.ம.வி), ந.தீபகா (சுந்தரமூர்த்தி நாயனார் வி.) சு.கிருபாகரன் (எழுவைதீவு முருக வேள் வி.)

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

பிரிவு 1: ம.ஐசூரியா (எழுவை தீவு முருகவேள் வி.), இ. துலக்சன் (காரை ஊரி அ.மி.த.க.வி), அ.யனுஜா (நாரன்தனை கணேச வி.)

**இசையும் அசைவும்**

பிரிவு 1: கோ.விஜீபா (அனலை தீவு வடலூர் அ.த.க.), கி.துர்க்காயினி (சுந்தர மூர்த்தி நாயனார் வி.), ம.கிறைண்டா (புனித மரியாள் ம.ம.வி)

**பேச்சு**

பிரிவு 1: சி.விசாளினி (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), சு.கஜந்தன் (காரை மெய்கண்டான் வி.) ப.குணதரன் (யாழ்ற்றன் கல்லூரி)

**பேச்சு**

பிரிவு 2: சி.தர்சிகா (சுந்தரமூர்த்தி நாயனார் வி.) அ.சாள்ஸ் டிலக்ஷன் (புனித அந்தோனியார் கல்லூரி), த.ஆரணி (யாழ்ற்றன் கல்லூரி),

**பேச்சு**

பிரிவு 3: செ.அருள்ராஜ் (புனித அந்தோனியார் கல்லூரி), அ.யாழினி (நாரந்தனை றோ.க.வி), தி.கஜீவன் (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.)

**பேச்சு**

பிரிவு 4: கோ.மிரோஜா (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), வ.கஜனி (யாழ்ற்றன் கல்லூரி), பா.சென்தியோன்சன் (புனித அந்தோனியார் கல்லூரி)

**பேச்சு**

பிரிவு 5: அ.யோனிற்றன் யோசப் (புனித அந்தோனியார் கல்லூரி), க.ரூபிகா (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), செ.சசிகலா (யாழ்ற்றன் கல்லூரி)

**பாவோதர்**

பிரிவு 1: பு.விதுஷா (நாரந்தனை கணேச வி.) செ.சிறி மாலா (யாழ்ற்றன் கல்லூரி), சு.டிலக் ஷனா (காரை ஊரி அ.மி.த.க.வி),

**பாவோதல்**

பிரிவு 2: ந.கல்யாணி (யாழ்ற்றன் கல்லூரி), அ.சுகந்தன் (புனித அந்தோனியார் கல்லூரி), ஆ.டிலானி (சுந்தர மூர்த்தி நாய னார் வி.)

**பாவோதல்**

பிரிவு 3: ஞா.கலைச் செல்வி (யாழ்ற்றன்கல் லூரி) பு.பிரிந்தா (அனலை தீவு சதா சிவ ம.வித்தியாலயம்), ந.தர்சினி (சுந்தர மூர்த்தி நாயனார் வி.)

**பாவோதல்**

பிரிவு 4: கோ.கனகேஸ்வரன் (யாழ்ற்றன்கல்லூரி), அ.அல்பிறட் நியூட்டன் (புனித அந்தோனியார்கல்லூரி), க.அனுஷியா (அனலை தீவு சதாசிவ ம.வி.)

**பாவோதல்**

பிரிவு 5: க.கோகிலா (யாழ்ற்றன்கல்லூரி), ம.மகின்சியா (புனித அந்தோனியார் கல்லூரி)

**இசை தனி**

பிரிவு 2: சு.மார்க்கண்டு (யாழ்ற்றன் கல்லூரி), நெ.ஸ்ரனிஸ்லாஸ் (புனித அந்தோனியார் கல்லூரி), ந.நதுஜா (கரம்பன்சிறியபுஷ்பம.வி)

**இசை தனி**

பிரிவு 3: இ.சிவகௌரி (யாழ்ற்றன் கல்லூரி) ம.கெயின்சன் (புனித அந்தோனியார்கல்லூரி), யூ.மேரிகயானா (கரம்பன் சிறிய புஷ்ப மகளிர் ம.வி.),

**இசை தனி**

பிரிவு 4: செ.சுயரூபி (யாழ்ற்றன் கல்லூரி), அ.அலெக்ஸ் (புனித அந்தோனியார் கல்லூரி), சு.நொயினி (புனித மரியாள் றோ. க.ம.வி.)

**இசை தனி**

பிரிவு 5: ம.மேரிடிசானி (புனித அந்தோனியார் கல்லூரி), ச.கிருஷ்ணவேணி (யாழ்ற்றன்கல்லூரி), ம.தவபாலன் (கரம்பன் சிறி புஷ்ப ம.வி.)

**இசை குழு 1**

புனித மரியாள் றோ.க.ம.வி., கரம்பன் சிறிய பு.ம. ம.வி.,புனித அந் தோனியார் வி.

**இசை குழு 2**

யாழ்ற்றன் கல்லூரி, கரம்பன் சிறிய பு.ம.வி., புனி த அந்தோனியார் கல்லூரி,

**நடனக் குழு 1**

யாழ்ற்றன் கல்லூரி, கரம்பன் சிறிய பு.ம.வி, புனித மரியாள் றோ.க.வி.,

**நடனம் தனி**

பிரிவு 1: ம.காயத்திரி, (யாழ்ற்றன் கல்லூரி),

**நடனம் தனி**

பிரிவு 2: சு.மனோகரி (யாழ்ற்றன் கல்லூரி), ஸ்ரீ.டாலனி (கலாநிதி ஆ.தியாகராசா ம.வி), ப.பவிதா (அனலைதீவு சதாசிவம் ம.வி.)

**நடனம் தனி**

பிரிவு 3: தி.அம்பிகா (யாழ்ற்றன் கல்லூரி) நா.நாகசிந்துஜா (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி), றோ.றோஜினி (கரம்பன் சிறிய புஷ்ப ம.வி.)

**நடனம் தனி**

பிரிவு 4: ஸ்ரீ.லக்ஷிகா (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.)

**நடனம் தனி**

பிரிவு 5: இ.பகிப்பிரியா (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி), சி.சிவசொரூபி (யாழ்ற்றன் கல்லூரி)

**நாடகம்**

கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி, புனித அந்தோனியார் கல்லூரி, அனலை தீவு சதாசிவ மகா வி.,

**வில்லிசை**

புனித அந்தோனியார் கல்லூரி, தம்பாட்டி அ.த.க.பா, நாரந்தனை றோ.க.ம.வி

**விவாதம்**

கலாநிதி ஆ.தியாகராசா ம.வி.,புனித அந்தோனியார் கல்லூரி,

**தமிழ் அறிவு வினா விடை**

கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி., புனித அந்தோனியார் கல்லூரி, புனித மரியாள் றோ.க.ம.வி


## இலங்கை மெதடிஸ்த திருச்சபை

### 195 வது மெதடிஸ்த திருச்சபை ஆண்டு நிறைவு விழா

கடந்த 195 வருடங்களாக மெதடிஸ்த திருச்சபை மக்களுக்கு ஆற்றிய பல்வேறுபட்ட திருப்பணிகள் குறித்து, குறிப்பாக நமது பிராந்திய மக்களின் விடுதலை, ஐக்கியம், நீதி சம்பந்தமான முன்னேற்பாடுகளை நோக்கியும் பின்வரும் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

*நற்செய்தி இன்னிசைப் பெருவிழா*

*காலம்:* 27.06.2008 வெள்ளி காலை 9.00 மணி புத்தூர் மெதடிஸ்த வளாகம்

28.06.2008 சனி காலை 9.00 மணி அச்செழு நல்லாயன் மெதடிஸ்த வளாகம்

*பாடல்கள், அருளுரை வழங்குபவர்:* சகோ. பிறடி ஜோசப் (தமிழ்நாடு, தென்னிந்தியா)

*மெதடிஸ்த தினம் (29.06.2008 ஞாயிறு)*

*காலை 10.00 மணி:* நன்றி வழிபாடும் திருப்பலி வழிபாடும்

பரி.பேதுரு மெதடிஸ்த ஆலயம்

*காலை 11.30 மணி:* வண ஜேம்ஸ் லின்ச் நினைவு இல்லம் பிரதிஷ்டை

*மதியம் 12.00 மணி:* பகிரங்கக் கூட்டம் - ரிம்மர் மண்டபம்

பி.ப.2.30 மணி வண.தொமஸ் சுகான்ஸ் நினைவு இல்லம் பிரதிஷ்டை

195 ஆவது ஆண்டு நிறைவு விழாவிலே முதல் திருப்பணியாளர்களாக மெதடிஸ்த திருச்சபையின் திருப்பணிகளை ஆரம்பித்த அருள்திருவாளர்கள் லின்ச், சுகான்ஸ் அவர்கள் விசேஷித்த பிரகாரமாக நினைவு கூரப்படுவார்கள்.

இன்றைய சூழ்நிலையில் மக்களின் அவலம் நீங்க, சமாதானம், நீதி, ஐக்கியம் யாவற்றையும் முன்னெடுத்துச் செல்ல மெதடிஸ்த திருப்பேரவைத் தலைவர் பேராயர் பேரருள் திரு.W.P.E.எபநேசர் ஜோசப் அவர்களின் வழிகாட்டலில் தரிசனம், பணி, இலக்குகள் அடிப்படையில் மெதடிஸ்த திருச்சபை இயங்கிக்கொண்டிருக்கின்றது.

இலங்கை மெதடிஸ்த திருச்சபை, யாழ்.சேகரம், நற்செய்தி பணிக்குழு.



## STUDY IN SINGAPORE

**மாணவர்களே உங்களுக்கோர் அரிய வாய்ப்பு தவறவிடாதீர்கள்**



- முதன்முதலாக இலங்கையில் இருந்து எவ்வித முன்கட்டணமுமின்றி சிங்கப்பூருக்கு 25 நாள்களில் STUDENT PASS (VISA) எடுத்துத்தருகின்றோம்.
- STUDENT PASS ஐ நீங்கள் பெற்றவு டன் சிங்கப்பூருக்குச் செல்லலாம்.
- மிகச்சிறந்த அனுபவம் வாய்ந்த எமது ஊழியர்களின் வழிகாட்டல்.
- நீங்கள் சிங்கப்பூரில் படிப்புடன் கூடிய வேலைவாய்ப்பினைப் பெறலாம் 100% எம்மால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- உங்களுக்கான தங்குமிடம் ஒழுங்கு செய்துதரப்படும்.
- ஒரு வருடம் படித்தபின் U.K./ AUSTRALIA போன்ற நாடுகளில் மேற்படிப்பைத் தொடரலாம். அல்லது சிங்கப்பூரில் வேலை பார்க்கலாம்.
- உங்கள் வசதிக்கேற்ப/ விருப்பத்திற்குரிய COURSE ஐ எம்மால் பெற்றுத் தரமுடியும்.
- COURSE FEES தவணைமுறையில் செலுத்துவதற்கு எம்மால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நீங்கள் சிங்கப்பூருக்கு எமது பிரதிநிதியால் அழைத்துச் செல்லப்படுவீர்கள்.
- விஷேட அம்சம் நீங்கள் கொழும்பிற்கு வருவதற்கு சிரமமாக இருந்தால் எமது E-MAIL ஊடாக உங்கள் சான்றிதழ்களை அனுப்பி வையுங்கள். மூன்று நாள்களில் OFFER LETTER அனுப்பிவைக்கப்படும்.
- WORK PERMIT. (P.R) எடுத்துத் தரப்படும்.

**COLOMBO:**
GLOBAL ALLIANCE
*133/1, HILL STREET, DEHIWALA.*
T.P.: 011 4876710, 077 7704420, 077 1600610

**SINGAPORE:**
GLOBAL ALLIANCE CONSULTANTS,
NO. 105 NORTH BRIDGE ROAD, SINGAPORE- 208816
T.P.: 006593429725

✱சகல விதமான பாடநெறிகளுக்கும் எம்மை அணுகுங்கள்
நீங்கள் SMS அனுப்பினால் நாங்கள் தொடர்பினை ஏற்படுத்துவோம்.
e.mail: khalid. khan 96 2 yahoo.com.sg



**University of Jaffna**

**PROF.K.BALASUBRAMANIAM RESEARCH AWARD**

Applications are invited to award a Gold Medal for the outstanding research in the use of Biochemistry/Biotechnology for the development or innovation in industry or for National Development in Sri Lanka. Credit will be given where the contribution has already in a positive impact.

Applicants are requested to send their applications on or before 27th July 2008 to the Assistant Registrar/ Academic, University of Jaffna with their bio-data, abstract of the research work carried out (about 600 words) and other relevant details. The person selected should present his/her work in person at an award ceremony to be held at the University of Jaffna, in September/October 2008.

**Registrar,**
University of Jaffna.
Jaffna.

(C/553490)


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
15.07.1930

மறைவு:
01.07.2002

**திருமதி**

**பொன்னுத்துரை இராசம்மா**

திதி: தேய்பிறை அட்டமி

எம் குடும்பத் தலைவியே
வேராகி தாங்கி எமைக் காத்தீர்
ஆறாண்டு காலம் எங்குதான் சென்றீர்கள்
ஓடோடி மீண்டும் வந்து உறவாட மாட்டீர்களோ?

*25/7, மானிப்பாய் றோட்,*
*ஓட்டுமடம். யாழ்ப்பாணம்.*

**மக்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும்

# புலமைப் பரிசில் பரீட்சை

## மாதிரி வினாப்பத்திரம்

திரு.எஸ்.கணேசலிங்கம் - திருமலை.

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்க வேண்டும்

*உயிரைப் புரந்து நிற்கும் காற்றே - இந்த*
*உலகு பரவ வருங் காற்றே*
*பயிரை வளர்த்து நிற்கும் காற்றே - பல*
*பயனும் உதவுகின்ற காற்றே*

*கடலை கலக்குகின்ற காற்றே - பாய்க்*
*கப்பலை ஓட்டுகின்ற காற்றே*
*உடலுக் குவகை தரும் காற்றே - உன்னை*
*உவந்து வழுத்துகின்றோம் காற்றே*



01. காற்றினால் கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக.

02. உயிரை காத்து நிற்பது எது எனப் பாடலில் கூறப்பட்டுள்ளது?

03. கடலில் செல்லும் போக்குவரத்து சாதனம் ஒன்று பாடலில் கூறப்பட்டுள்ளது. அது எது?

04. பயிர் என்பதன் பன்மை வடிவத்தை எழுதுக.

05. கப்பல் ஓட்டுபவனை எவ்வாறு அழைப்பர்?

06. உன்னை என்பதன் எதிர்ப்பதம் யாது?

07. பின்வரும் சொற்களுக்கான ஒத்த கருத்தை பாடலில் இருந்து எழுதுக?
1) ஆவி - ................................ 3) சந்தோசம் - ................................
2) வளி - ................................ 4) மேனி - ................................

◈ வெற்றிடத்துக்கு பொருத்தமான எழுத்துப் பிழையற்ற சொல்லை தெரிவு செய்து எழுதுக.

08. வைத்தியசாலையில் அனேகமான ................................ வரிசையில் இருந்தனர்.
(நோயாளிகள், நோயாழிகள், நோயாளிகழ்)

09. கர்ணன் தனது உயர்கல்வியை ................................ தொடர்ந்தான்.
(பல்களைக்கழகம், பல்கலைக்கழகம், பல்கலைக்களகம்)

10. ஒரு அப்பியாசப் புத்தகத்தின் விலை ..................... எனக் குமார் கூறினான்.
(முந்நூறு, முன்நூறு, முன்னூறு)

◈ பின்வரும் சொற்களை ஒழுங்காக்கி கருத்துள்ள வசனங்களை அமைக்க.

11. குதிரையை / மண் / ஆற்றில் / நம்பி / இறங்கலாமா

12. ஒரு / ஆராயாது / நன்கு / விடயத்தை / ஈடுபடலாகாது / அதனில்

13. திருந்தாத / திருத்துவது / சிறுவயதில் / இயலாத / பிள்ளையைத் / காரியம்

◈ கீழ்வரும் ஒவ்வொரு படத்திலும் காட்டப்படுபவைகளுக்குரிய ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களை பயன்படுத்தி எழுதுக.

14.



15.



16.



................................ ................................ ................................

◈ ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்பதத்தினை எழுதுக.

17. COLOUR - ................................ 18.CHRISTMAS -................................

◈ சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்கருத்தினை எழுதுக.

19. ஸ்துதிய - ................................ 20. நவய - ................................

◈ 21 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

21. தகரங்களில் அடைக்கப்பட்ட உணவை கொள்வனவு செய்யும் போது கவனிக்க வேண்டியது
1) அடைத்தநிறுவனம் 2) காலவதியாகும்திகதி 3) அடைக்கப்பட்டநேரம்

22. வானில் மிக அபூர்வமாக காணக்கூடிய ஒன்று
1) கோள்கள் 2) வால்வெள்ளி 3) சந்திரன்

23. ஆறுகளை அதிகளவில் கொண்ட மாகாணம்
1) வடமாகாணம் 2) மத்தியமாகாணம் 3) கிழக்குமாகாணம்

24. குளிர் பிரதேசத்திற்கு ஏற்ற உடை
1) பட்டு 2) பருத்தி 3) கம்பளி

25. பெருங்கரடித் தொகுதியில் உள்ள உடுக்களின் எண்ணிக்கை
1) 6 2) 7 3) 5

26. தும்புத் தன்மையுடைய சதைத்தொகுதியை கொண்ட பழம்
1) வாழை 2) மா 3) பலா

27. திசையறிகருவி காட்டும் திசை
1) கிழக்கு 2) மேற்கு 3) வடக்கு

28. ஊனுண்ணிக்கு உதாரணமாக கொள்ளக் கூடியது
1) யானை 2) புலி 3) நாய்

29. வானில் அதி உயரத்தில் பறக்க கூடிய பறவை
1) கிளி 2) கோழி 3) பருந்து

30. இலங்கையின் தேசியக் கொடியில் காணப்படும் வர்ணங்கள்
1) சிவப்பு, பச்சை, செம்மஞ்சள், நீலம் 2) சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள், பசசை
3) சிவப்பு, வெள்ளை, பச்சை, மஞ்சள்

◈ தரப்பட்ட படங்களுக்கு பொருத்தமான பெயர்களை தெரிவு செய்து அதன் கீழ் எழுதுக.
(கடற்பறவை, அணில், புறா, வெங்காயம், கடல்மாங்காய், செவ்வெறும்புக் கூடு, வெள்ளைப்பூடு, முள்ளம்பன்றி, குருவிக்கூடு, தோடம்பழம்)

31.



32.



33.



34.



35.



.................... .................... .................... .................... ....................

◈ சரியாயின் ( சரி ) எனவும் பிழையாயின் ( பிழை ) எனவும் அடையாளமிடுக.

36. பூமி தன்னைத்தானே சுற்றிவர இருபத்திநான்கு மணித்தியாலங்கள் எடுக்கும். ( )
37. வளமற்ற மண்ணில் தாவரங்கள் செழித்து வளர்வதில்லை. ( )
38. சமாதானத்தின் குறியீடாக வெண்புறா கருதப்படுகின்றது. ( )
39. சுவர் ஒன்றை நிலைக்குத்தாக கட்ட தூக்குக்குண்டு பயன்படுகின்றது. ( )
40. மீன்களின் வாற்செட்டை அவை செல்லும் திசையை மாற்ற உதவும். ( )
41. விவசாயிக்கு நன்மை செய்யும் பிராணிகளில் நத்தையும் ஒன்றாகும். ( )
42. இந்திய நாட்டின் நாணயம் ரூபாய் ஆகும். ( )
43. கவ்வாந்துச் செய்யப்படும் பயிர்களுள் தேயிலையும் ஒன்றாகும். ( )
44. பாதசாரிகள் வீதியின் இடது பக்கத்தால் செல்ல வேண்டும். ( )
45. மகாசேனனினால் மின்னேரியாக்குளம் கட்டப்பட்டது. ( )

◈ தரப்பட்ட சொற்களைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை இடுக.

*1. இறால் 2. வெள்ளி 3. அல்பனா 4. மின்மானி 5. மண்புழு*

46. வித்துக்களை பயன்படுத்தி செய்யும் ஆக்கம் ☐
47. வெள்ளை நிற இரத்தம் உள்ள பிராணி ☐
48. சுக்கிரன் என அழைக்கப்படும் கோள் ☐
49. மின்சாரத்தை அளத்தல் ☐
50. விவசாயிகளின் நண்பன் ☐

51. 8.5m நீளமும் 3m அகலமும் கொண்ட பூம்பாத்தியின் பரப்பளவு யாது?
................................................................

52. 16.00 மணிக்கு கொழும்பில் இருந்து புறப்பட்ட புகைவண்டி மறுநாட்காலை 5.15 மணிக்கு திருகோணமலையை அடைந்தால் அது பிரயாணம் செய்த நேரம் யாது?................................

53. கமால் கிழக்கு நோக்கி 3km சென்று பின்னர் வலதுபுறம் திரும்பி 4km சென்றானாயின் அவன் பயணம் செய்த மொத்தத் தூரம் எவ்வளவு?
................................................................

54. தொகுதி 5, பகுதி 6, தொகுதி 3, பகுதி 6 உம் உள்ள பின்னங்களை கூட்டினால் விடை யாது?................................

55. 3பேருக்கு 750*ml* குளிர்பானம் தேவை எனின் 20பேருக்கு எத்தனை மில்லிலீற்றர் குளிர்பானம் தேவை? ................................

56. மு.ப 8.40 மணியை டிஜிற்றல் நேரமாகத் தருக.
................................................................

57. 2550 கிராமை கிலோ கிராமில் எழுதினால்.
................................................................

◈ அருகில் தரப்பட்ட விலைப்பட்டியலைப் பயன்படுத்தி வினாக்களுக்கு விடை தருக.

| பொருள்கள் | அளவு | விலை |
|---|---|---|
| *அரிசி* | *2kg* | *56.00* |
| *மா* | *1kg* | *24.00* |
| *சீனி* | *500g* | *32.00* |
| *சன்லைட்* | *1* | *17.00* |
| *தே. எண்ணை* | *500ml* | *74.00* |
| *பருப்பு* | *250g* | *18.00* |
| *தேயிலை* | *250g* | *36.00* |

58. 2kg அரிசியினதும் 1.5kg மாவினதும் 500g அரிசியினதும் விலை யாது?
................................

59. 1டசின் சன்லைற் வாங்கும் ஒருவர் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?
................................

60. பட்டியலில் உள்ள பொருள்கள் அனைத்தையும் கொள்வனவு செய்த ஒருவர் செலுத்த வேண்டிய மொத்த தொகை................................

61. 1250g சீனியில் விலை யாது?
................................

62. 1kg சீனியின் 20 பேருக்குரிய தேநீர் தயாரிக்கலாம் எனின் 100பேர் கொண்ட விருந்துபசாரத்துக்கு தேவைப்படும் சீனியின் அளவு யாது?
................................

63. 3*l* எண்ணெயினதும் 2kg சீனியின்தும் விலை யாது?
................................

64. 1750*ml* தே. எண்ணெயின் விலை யாது?
................................

◈ "*நான் கூர் முறிந்துவிட்ட பென்சில்*" என்று தொடங்கும் வாக்கியத் தொடரை, நான்கு சொற்களுக்குக் குறையாத ஆறு வாக்கியங்கள் கொண்டு பூரணப்படுத்துக.

65. ................................................................
66. ................................................................
67. ................................................................
68. ................................................................
69. ................................................................
70. ................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேணல் முத்தலிப் கொலை: 4 சந்தேக நபர்கள் விடுதலை

கொழும்பு, ஜூன் 26

இராணுவப் புலனாய்வு அதிகாரி லெப்டினன்ட் கேணல் துவான் முத்தலிப் கொலை தொடர்பாகக் கடந்த மூன்று வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு பேரையும் விடுதலை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டது.

2005ஆம் ஆண்டு மே 31 ஆம் திகதி முத்தலிப் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

இக்கொலை தொடர்பாக டபிள்யூ. ஏ.சஞ்சீவ, ஈ.ஆர். கருணாரத்ன, ஆறுமுகன் செந்தில்குமரன் (ராஜன்), இராஜரத்தினம் சரஸ்வதி (உமா) ஆகியோர் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்குப் போதிய ஆதாரங்கள், சாட்சியங்கள் இல்லை என சட்டமா அதிபர் தெரிவித்தமையை அடுத்தே இவர்கள் இப்போது விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

நேற்றுமுன்தினம் இவர்கள் தொடர்பான வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் இரவீந்திர பிரேமரத்ன முன்னிலையில் எடுக்கப்பட்டது.

அப்போது அங்கு ஆஜரான குற்றப்புலனாய்வுப் பொலிஸார், இவ்விடயம் தொடர்பான சட்டமா அதிபரின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி, சம்பந்தப்பட்டோரை விடுவிப்பதில் ஆட்சேபனை ஏதுமில்லை எனத் தெரிவித்தனர். அதனையடுத்து அவர்களை விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (சி)

## மயிலங்காடு மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்

யாழ்ப்பாணம், ஜூன்26

மயிலங்காடு ஸ்ரீ முருகன் கிராம அபிவிருத்திச் சங்கம் தனது கிராமத்தின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, ஜீ.சி.ஈ. சாதாரணதர, உயர்தரப் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கவுள்ளது.

இக் கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்குச் சங்கத்தின் தலைவர் கலாபூசணம் மா.சீவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினிதேவி இளங்கோவன், உடுவில் பிரதேச செயலர் த.மஞ்சுளா தேவி ஆகியோர் கலந்துகொள்வர். (202)

## அரச முகாமைத்துவ சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன்26

மத்திய, மாகாண அரச முகாமைத்துவ சங்கத்தின் கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ். மாநகரசபைச் செயலாளர் இ. இரத்தினசிங்க ம் தலைமையில் நடைபெறவுள்ளது. (202)

# ஊடகவியலாளர் கைது செய்யப்பட்டால் உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை

## தனக்கு அறிவிக்கக்கோருகிறார் பைஸர் முஸ்தபா

கொழும்பு, ஜூன் 26

ஊடகவியலாளர்கள் கைது செய்யப்படுகின்றபோது அது பற்றித் தனக்கு உடனுக்குடன் அறிவித்தால் குறித்த பொலிஸ் நிலையத்திற்கு உடன் விரைந்து சென்று அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்பார் என்று சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

தமிழ் ஊடகவியலார் சங்கப் பிரதிநிதிகளை கடந்த திங்கட்கிழமை அவரின் அமைச்சின் அலுவலகத்தில் சந்தித்து உரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்த்துவைக்கவும், தமிழ் ஊடகவியலாளர்களின் நலன்புரித் தேவைகளைப் பெற்றுத் தரவும், என்னாலான காத்திரமான பங்களிப்புகளைச் செய்ய பின்னிற்க மாட்டேன். தமிழ் முஸ்லிம் ஊடகவியலாளர்கள் ஒன்றிணைந்து 'தமிழ் பேசும் ஊடகவியலாளர் சங்கம்' என்ற அடிப்படையில் செயற்பட்டால் எமது தேவைகளை மேலும் வலுவாக்க முடியும் என்றார்.

இதில் கலந்து கொண்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் செயலாளர் ஆர். சிவராஜா தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து பிரதி அமைச்சரிடம் விரிவாக விளக்கிக் கூறினார்.

இதேவேளை, ஊடக த்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவை எதிர்வரும் புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு ஊடகத்துறை அமைச்சின் அமைச்சுக் அலுவலகத்தில் பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபா தலைமையிலான குழுவினர் சந்தித்து அமைச்சரிடம் இவ்விடயங்களை கவனத்திற்குக் கொண்டுவரவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. - என்று பைஸர் முஸ்தபா மேலும் கூறினார்.

# கட்டுப்பாடு, நிதி முகாமைத்துவம், சிறந்தசேவை; மக்களின் தேவையை நிறைவேற்ற உகந்த வழிகள்

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரச அதிபர் ஆலோசனை

நல்லூர், ஜூன்26

சிறந்த நிதி முகாமைத்துவம், கட்டுப்பாடு, வாடிக்கையாளர்களுக்கான சிறந்த சேவை என்பவற்றை ஒவ்வொரு சங்கங்களும் செயற்படுத்த வேண்டும். இதன் மூலம் கூட்டுறவுச்சங்கங்கள் மக்களின் தேவைகளை உரிய முறையில் நிறைவேற்றக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறு யாழ். அரச அதிபர் கே. கணேஷ் கூறினார்.

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இரண்டாவதுகூட்டுறவு நகர் விற்பனை நிலையத்தின் திறப்பு விழா அண்மையில் சங்கத்தின் தலைவர் ப. கிரிதரன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அரச அதிபர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் இடம்பெயர்ந்து வாழும் சூழ்நிலையிலும் அவர்களுக்கான உணவுத் தேவைகளை நிறைவு செய்வதில் பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலும் இங்குள்ள 24 பல.நோ.கூ.சங்கங்களும் முன்னெடுத்து வருகின்றன. அந்தப் பணி மேலும் சிறப்பாக அமைய வேண்டும்.

மக்களின் கவனம் இன்று கூட்டுறவுச் சங்கங்களை நோக்கித் திரும்பியுள்ளது. குறைகள் தவறுகள் குறித்த விமர்சனங்கள் கருத்துக்களை செய்தித்தாள்களினூடாக வெளிப்படுத்ததுகின்றார்கள். எங்களுக்கும் தெரிவிக்கிறார்கள். சிறந்த சேவையை எதிர்பார்க்கிறார்கள்.

அநேக சங்கங்கள் நட்டத்தின் மத்தியிலும் தமது சேவையை நல்ல முறையில் செய்து வந்ததைக் கடந்த காலங்களில் காணக்கூடியதாக இருந்தது. ஊழியர்களின் அர்ப்பணிப்பினால் இன்று சில கூட்டுறவுச் சங்கங்கள் லாபத்துடன் இயங்கி வருகின்றது. மக்களின் தேவைகளை நிறைவேற்றும் நல்ல நோக்குடன் செயற்படுவது ஒவ்வொருவரது கடமையுமாகும்.

பல.நோ.கூ.சங்கங்களின் வளர்ச்சிக்காக மாவட்டச் செயலகம் தனது பங்களிப்பை உரிய முறையில் வழங்கி வருகின்றது. கஷ்டப்படும் மக்களுக்கு நீதியான சேவையை வழங்குவதில் கூட்டுறவுச் சங்கங்களும் அதன் பணியாளர்களும் முன்வர வேண்டும். எமது வளங்களைக் கொண்டு நிறைவான செயற்பாடுகளை நோக்கிச் செல்ல இறையருள் கிடைக்கட்டும்-என்றார். (202-111)

## துன்பங்களைச் சகித்துக் கொள்ளவேண்டும்

தமிழ்நாட்டில் பாண்டிய அரசன் மிகப் புகழ் பெற்றவன். அவன் தன் படைப் பலத்தைப் பெருக்க விரும்பினான். தனது மந்திரியுடன் கூட பலரையும் பணத்துடன் அனுப்பி, குதிரைகள் வாங்கிவரப் பணித்தான். குதிரைகள் வாங்க மந்திரி பணத்துடன் சென்றார். ஒரு கிராமத்தினருகில் வந்து தங்கினார். அங்கு ஒரு யோகீஸ்வரரைச் சந்தித்தார். மந்திரி அவரது உபதேசங்களை அமர்ந்து கேட்டார். மந்திரி இளைஞர். அக்கால இளைஞர்களுக்குப் பக்தி இருந்தது. மிகுந்த பக்தியுடனும் நேர்மையுடனும் அமர்ந்து கேட்டார். போர்வீரர்களும் கூட இருந்தனர். அவரிடம் இருந்த பணமும் செலவழிந்தது. பக்கத்திலுள்ள சிவன் கோயிலும் சிதிலமாகி, கவனிப்பாரற்றுக் கிடந்தது. அதைப் புதுப்பிக்கப் பணத்தைச் செலவழித்தார்.

இது பற்றிய செய்தி பாண்டிய அரசனின் காதுகளுக்கு எட்டியது. குதிரை வாங்கச் சென்ற மந்திரி, கண்டவர்களுக்காகப் பணத்தைச் செலவழித்தார். கோயிலையும் புதுப்பிக்கப் பணம் செலவழித்தார் என்று கேள்விப்பட்டான். அரசன் மந்திரியை வரவழைத்தான். மந்திரி வந்தார். கவலைப்படாமல் வந்தார். அவருக்கு ஏது கவலை? தவறு செய்தவர்களல்லவா கவலைப்படவேண்டும். இடைவிடாது கடவுளை நினைத்திருப்பவர்க்குக் கவலை இல்லை.

அரசன் கூறினான். "மந்திரி, குதிரை வாங்குவதற்காகக் கொடுத்த பணம் முழுவதையும் வீணாக்கி விட்டீர்கள். நீங்கள் பணத்தைச் செலவழித்ததற்காகக் கவலைப்படவில்லை. கோபப்படவில்லை. ஏன் உத்தரவை நீங்கள் நிறைவேற்றவில்லை. அத்தகைய மந்திரியால் பயனில்லை". மந்திரி சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறையிலுங்கூட இளம் மந்திரி கடவுள் நாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்தார். அங்கு பல பாடல்களை இயற்றினார். அவரது நடத்தை மிகவும் உயர்வாக இருந்தது. இதனை அறிந்த அரசன் அவரை விடுதலை செய்தான். தங்கள் விருப்பப்படி சாதனை புரியுங்கள் என்று அனுமதியளித்தான். மந்திரி "கருணை மிக்க இறைவா, அருள் மிகுந்தவரே, இவ்வளவு நாள்கள் எனது வாழ்க்கையை வீணாக்கி விட்டேன். இதுவரையில் தங்களை நினைக்கவே எனக்கு நேரமில்லை. அதற்குரிய நேரத்தை நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். தங்கள் புகழைப் பாடிப்பாடியேதான் என் வாழ்நாளை முடித்துக்கொள்வேன்" என்று இறை வனைப் புகழ்ந்தார். அவர் பாடிய பாடல்களை மக்கள் வேதப் பிரமாணமாக ஏற்றுக்கொண்டனர். அவேரே மாணிக்கவாசகர். அவரது பாடல்கள் மாணிக்கங்களாகத் திகழ்ந்தன.



மக்கள் பல துன்பங்களை ஏற்றுக்கொள்கின்றனர். துன்பங்கள் முடிவில் நல்லதையே நல்கும். இறைவனை அடைய விரும்புவோர் இத் துன்பங்களைச் சகித்துக் கொள்ள வேண்டும். துன்பத்தைச் சகித்துக் கொள்ள இயலாதவர்கள், இறைவனை அடைதல் இயலாது.

சாயி சிந்தனை

## தென்மராட்சிப் பிரதேச மாணவர்களுக்குப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன்26

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சாவச்சேரி நகரசபையினர் பாடசாலை மாணவர்களிடையே போட்டிகளை நடத்தவுள்ளனர்.

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளையும், இடைநிலை, உயர்பிரிவு மாணவர்களிடையே பேச்சு, கட்டுரை, கவிதை, பண்ணிசை ஆகிய போட்டிகளை நடாத்தவுள்ளனர்.

போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபரூடாக விண்ணப்பிக்குமாறு நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் கேட்டுள்ளார். (202-207)

## உள சமூகப் பணியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன


யாழ்ப்பாணம், ஜூன்26

யாழ்ப்பாணம் சாந்திகம் நிலையத்தினால் நடத்தப்பட்ட உள சமூகப் பணியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வுஅண்மையில் சாந்திகம் நிலையத்தில் டாக்டர் வ. அனவரதன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி உரை நிகழ்த்தினார்.

வைத்திய நிபுணர் எஸ். சிவயோகன் மற்றும் சாந்திக பணியாளர்கள், உறுப்பினர்கள் என பலர் கலந்த கொண்டனர்.

இப் பயிற்சி நெறியில் கலந்து கொண்ட பயிற்சியாளர்கள் மூன்று மாத கால கற்கை நெறியினையும், ஒரு மாதகால யாழ். போதனா வைத்தியசாலை பயிற்சிகளையும் இரண்டு மாதகால களப் பயிற்சிகளையும் பெற்றுள்ளனர். (202-131)



யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இரண்டாவது கூட்டுறவு நகர் விற்பனை நிலையத்தை யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் திறந்து வைப்பதை முதலாவது படத்தில் காணலாம்.
யாழ்.பிரதேச செயலர் ம.ஜெகூ, யாழ்.செயலகத் திட்டப் [illegible] ஆகியோர் உரை நிகழ்த்துவதை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.
சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் விருந்தினர்களுக்கு விற்பனை நிலையத்திலுள்ள பொருள்களைக் காண்பிப்பதை இறுதிப் படத்தில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தோல்வியடையும் நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு இடம்

தோல்வியுற்ற நாடுகளின் வரிசையில் மீண்டும் இலங்கைக்கு 'உயரிய' இடம் உலகளாவிய ரீதியில் கிடைத்திருக்கின்றது.

'சமாதானத்துக்கான வெளிநாட்டுக் கொள்கை மற்றும் நிதி' என்ற சர்வதேச அமைப்பு வருடா வருடம் வெளியிடும் தோல்வியுற்ற நாடுகளின் வரிசையிலேயே இம்முறையும் இலங்கை தனது ஸ்தானத்தை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

மொத்தம் அறுபது நாடுகள் தோல்வியுறும் தேசங்களின் வரிசையில் இருக்கின்றன என அந்த சர்வதேச அமைப்பு பட்டியலிட்டிருக்கின்றது.

அந்தப் பட்டியலில் முதலாவது இடம் சோமாலிய நாட்டுக்கு.

இருபதாவது இடத்தை இலங்கை பெற்றுக்கொண்டு தனது 'பெருமையை'(?) வெளிப்படுத்தியிருக்கின்றது.

இந்த நாட்டில் இடம்பெறும் ஆட்சி முறையின் சீத்துவத்தையும், அராஜகங்களின் அத்துமீறலையும், ஊழல், துஷ்பிரயோகம், மோசமான பொருளாதாரக் கொள்கை, தனது நாட்டு மக்கள் எனத் தான் உரிமை கோரும் ஒரு சிறுபான்மை இனக்குழுமத்தின் மீதே அரசு வெளிப்படுத்தி வரும் போர் வெறிப் போக்கு போன்றவற்றையும் நோக்கும் போது அடுத்து வரும் வருடங்களில் இந்தப் பட்டியலில் இருபதாவது இடத்திலிருந்து மேலும் பல படிகள் இலங்கை முன்னேறி தோல்வி வரிசையில் முன்னுரிமை நிலை பெறும் என்பது திண்ணம்.

இலங்கையின் பொருளாதார நிலைமை குறித்து வெளியாகும் புள்ளி விவரங்கள் இந்தத் திசையை நோக்கித்தான் இலங்கைத் தேசம் சென்று கொண்டிருக்கின்றது என்பதை நமக்குத் துலாம்பரமாக வெளிப்படுத்தி நிற்கின்றன.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்டதை விட இவ்வருடத்தில் மிக மோசமானதாக இருக்கப்போகின்றது என்ற அதிர்ச்சித் தகவலைப் பொருளாதார நிபுணர்கள் இப்போது வெளியிட்டிருக்கின்றார்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் மற்றும் பின்னடைவுகள் ஆகியவற்றுக்கு மத்தியிலும் இந்த வருடத்தில் குறைந்த பட்சம் ஏழு வீதமாவது பொருளாதார வளர்ச்சி வீதம் இருக்கும் என இரண்டு வாரங்களுக்கு முன்னர் இலங்கை மத்திய வங்கி அறிவித்திருந்தது.

பணவீக்கம் எகிறிக் கொண்டிருந்தாலும் இறுக்கமான நாணய நிதிக் கொள்கையைக் கடைப்பிடிப்பதன் மூலம் இந்தப் பொருளாதார வளர்ச்சி வீதத்தை எட்டமுடியும் என்றும் மத்திய வங்கி நம்பிக்கை வெளியிட்டிருந்தது.

ஆனால் அது சாத்தியப்படாது என்பது இப்போது தெளிவாகிவிட்டது. கடந்த நான்கு வருட காலத்தில் ஆகக் குறைந்த பொருளாதார வளர்ச்சி வீதத்தை இந்த ஆண்டு இலங்கை காட்டப் போகிறது. இந்த வருடத்தில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி ஆக 5.8 வீதமாகவே அமையும் என்று பொருளாதார விவகாரங்களைத் தர நிர்ணயம் செய்யும் மலேசிய நிறுவனத்தின் சிரேஷ்ட பொருளாதார நிபுணர் குறிப்பிட்டிருக்கின்றார்.

2007 இல் 7.5 வீத பொருளாதார வளர்ச்சி வீதத்தை எட்டமுடியும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ஆக 6.8 வீத வளர்ச்சியே அப்போது எட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அது இப்போது 'மேலும் 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைபோல' 5.8 வீதத்துக்குப் படுத்துவிட்டது.

இதேசமயம், இலங்கையில் பணவீக்கமும், இலங்கைவாசி உயர்வும், மோசமாக உயர்ந்துள்ளன. இந்தப் பிராந்தியத்தில் எந்த நாட்டிலும் இல்லாத வகையில் இலங்கையில் பணவீக்கம் முப்பது வீதத்தைத் தொட்டு நிற்கின்றது.

எரிபொருள் உட்பட சகல அத்தியாவசியப் பொருள்களினதும் விலைகள் அதிகரித்து, வானத்தைத் தொட்டுள்ளன.

இந்தப் பொருளாதார நெருக்கடிகளுக்கும், மோசமான வாழ்க்கைச் செலவு உயர்வுக்கும், பணவீக்கப் பிரச்சினைக்கும் உலக சந்தையில் பொருள்களின் விலை உயர்வே முக்கிய காரணம் என்று கூறி இலங்கை அரசு தனது தவறை வேறு தரப்புகள் மீது சுமத்தித் தப்பிழைக்கப் பார்க்கின்றது.

உலக நாடுகளில் எரிபொருள் உட்படப் பல அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உயர்ந்துள்ளன என்பது உண்மைதான்.

ஆனால் அதற்காக இந்தப் பிரதேசத்தின் ஏனைய நாடுகள் எல்லாம் உலக சந்தையில் எரிபொருள் விலை உயர்வுக்கு ஏற்ப தமது நாட்டிலும் எரிபொருளின் விலையில் உயர்வை ஏற்படுத்த முயற்சிக்கவில்லை. அதுபோலவே ஏனைய அத்தியாவசியப் பொருள்களின் விலைகளையும் அவை அதிகரிக்கவும் இல்லை.

அவை எல்லாம் ஏதோ ஒரு வகையில் சர்வதேசப் பிரச்சினைகளுக்கு ஏற்பவகையில் தமது பொருளாதார நிலைப்பாடுகளை மாற்றியமைத்து, சர்வதேச மட்டத்திலான விலை உயர்வு தமது மக்களையும் எட்டிப் பாதிப்பை ஏற்படுத்த விடாமல் பார்த்துக் கொள்கின்றன.

ஆனால் இலங்கையில் மட்டும்தான், சர்வதேச விலை உயர்வைக் காட்டி தனது நாட்டு மக்களின் தலையில் மிளகாய் அரைக்க முயற்சிக்கின்றது.

இந்த அரசுத் தலைமையின் பொறுப்பற்ற போக்குக்காக இலங்கைத் தீவு முழுவதுமே பொருளாதார நிலையில் பின்தங்கி, பெரும் விலை கொடுக்க வேண்டிய கட்டாய இக்கட்டை எதிர்கொள்ளும் கட்டத்துக்கு வந்திருக்கின்றது.

# மருதமடு ஆலயம் மீண்டும் ஆராதனைக்குரிய திருத்தலமாக வேண்டி சின்னமடுவில் வழிபாடுகள்

## ஆடித் திருவிழாவிற்கு ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜூன்26

மருதமடுத் தேவாலயம் மீண்டும் ஆராதனைக்குரிய திருத்தலமாகப் பேணப்பட வேண்டி சின்னமடுத் தேவாலயத்தில் வழிபாடுகள் நடத்தப்படவுள்ளன.

மருதமடுவின் ஆடித் திருவிழாவை எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பித்து 2ஆம் திகதி வரை சின்னமடுவில் நடத்தி இறைவேண்டுதல் செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மருதமடுப் பிரதேசத்தில் சண்டை நடைபெற்றதை அடுத்து மாதாவின் திருச்சொரூபம் தேவன்பிட்டி தேவாலயத்தில் வைக்கப்பட்டது.

மாதாவின் திருச்சொரூபத்தை மீண்டும் மடுத் தேவாலயத்தில் வைத்து வணக்க வழிபாடுகள் இடம்பெற வேண்டுமாயின் அப்பிரதேசத்தை சமாதான வலயமாகப் பிரகடனப்படுத்துமாறு அரசையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் மன்னார் ஆயர் இராயப்பு யோசேப் கோரியிருந்தார்.

எனினும் அதற்குச் சாதகமான பதில் இன்னும் கிடைக்காததால் ஆடித் திருவிழாவை நடத்துவது சாத்தியமற்றது என கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற மதகுருமார் மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

இத்திருவிழாவை தீவகத் திலுள்ள சின்னமடுத் தேவாலயத்தில் நடத்துவதென அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிரந்தர அமைதி வேண்டியும் மருதமடு மீண்டும் ஆராதனைக்குரிய திருத்தலமாகப் பேணப்பட இறைவேண்டுதல் செய்யவும் இத் திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு திருவிழா ஆரம்பமாகும். 2 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு திருவிழாத் திருப்பலி இடம்பெறும்.

இத் திருவிழாவை நடத்துவது தொடர்பான கூட்டம் கடந்த 19ஆம் திகதி ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருவிழா தொடர்பான பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

சிரமதானப்பணி, சுகாதார சேவை, குடிதண்ணீர் விநியோகம், போக்குவரத்து, மின்சாரம், பாதுகாப்பு, தொண்டர்- முதலுதவிச் சேவைகள் குறித்துத் தீர்மானிக்கப்பட்டன. (202)

# அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட ஒருவரை 90 நாள்களுக்கு மேல் பொலிஸ் காவலில் வைக்கமுடியுமா?

## ஊடகவியலாளர் திஸநாயகம் வழக்கில் சட்டவாதம்

கொழும்பு, ஜூன் 26

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒருவரை 90 நாள்களுக்குள் நீதி மன்றத்தின் முன் ஆஜர்படுத்த வேண்டும் என்று அச்சட்டம் கூறுகின்றது.

ஆனால் அதன் பின்னரும் அவரைப் பாது காப்பு அதிகாரிகள் அவசர காலச் சட்ட விதிகளின் கீழ் பாதுகாப்புச் செயலாளர் குறிப்பிடும் இடத்தில் தடுத்து வைக் கலாமா?

அல்லது நீதிமன்ற உத்தரவுப்படி - நீதிமன்றக் காவலில் - சிறைச்சாலையில் - விளக்கமறியலில் தான் வைக்க வேண்டுமா?

- இந்தச் சட்ட விவாதம் ஊடகவியலாளர் திஸநாயகம் தொடர்பான வழக்கில் எழுந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பான தனது தீர்ப்பை கொழும்பு நீதிவான் நீதிமன்றம் எதிர்வரும் 30ஆம் திகதி வழங்கவிருக்கின்றது.

திஸநாயகம் கைது செய்யப்பட்டு 107 நாட்களாகிவிட்டன. அவர் நீதிமன்றத்தின் முன் ஆஜர் செய்யப்பட்டாலும், இன்னும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் விடுத்த தடுப்புக் காவல் உத்தரவின் கீழேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் அவர் வைக்கப்படவில்லை.

கடந்த திங்கட்கிழமை அவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது இவ்விடயத்தை அவரது சட்டத்தரணிகள் எழுப்பினர்.

ஆனால் அவசரகாலச் சட்டத்தின் கீழான தடுப்புக் காவல் உத்தரவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவரை நீதிமன்றம் முன் ஆஜர் செய்து அவரின் வழக்கை விசாரிக்க முடியாது என நீதிமன்றுக்குக் கிடைகலாது என ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் முடிவை நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார். எனினும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் இதனை நிறை வேற்றவில்லை.



ஆனால் அவசரகாலச் சட்டத்தின் கீழான தடுப்புக் காவல் உத்தரவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவரை நீதிமன்றம் முன்பு குறிப்பிட்டபடி முடிவு காவலுக்கு அனுப்பு நீதிமன்றுக்குக் கிடையாது என அரச தரப்பில் வாதிடப்பட்டது.

இவ்விவாதம் குறித்து எதிர்வரும் 30 ஆம் திகதி நீதிமன்றம் தீர்ப்பளிக்கவிருக்கின்றது.

திஸநாயகம் தொடர்ந்தும் குற்றச்சாட்டு எதுவும் சுமத்தப்படாமல் 107 ஆவது நாளாகப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவசரகால சட்டவிதிகளின்படி 90 நாள்கள் முடிவடைந்ததும் நபர் ஒரு வரை நீதிமன்றத்தின் முன்னிலையில் ஆஜர் செய்யவேண்டும். எனினும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் இதனை நிறை வேற்றவில்லை.

கடந்த திங்கட்கிழமை திஸநாயகம் சார்பில் ஆஜரான சட்டத்தரணி 90 நாள்கள் முடிவடைந்ததும் நபர் ஒருவரை பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரிடமிருந்து பொதுவான தடுப்புக் காவலிற்கு மாற்றவேண்டியது அவசியம் என சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதேவேளை, பத்திரிகையாளர் திஸநாயகம் மீது சுயாதீன நீதிமன்றம் ஒன்றின் முன்னிலையில் ஏற்றுக் கொள்ளத்தக்க குற்றச்செயல் தொடர்பான குற்றச்சாட்டைச் சுமத்த முடியாவிட்டால் அவரை உடனடியாக விடுவிக்குமாறு கோரும் கடிதங்களை ஜனாதிபதிக்கு எழுதுமாறு சர்வதேச மன்னிப்புச் சபை கேட்டுள்ளது.

திஸநாயகம் சித்திரவதை செய்யப்படக்கூடாது. அவர் தனது குடும்பத்தவர்களையும், மருத்துவர்களையும், சட்டத்தரணியையும் சந்திப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்றும் கோருமாறும் மன்னிப்புச் சபை கேட்டுள்ளது. (சி)

### இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையின் பொன்விழா ஞாயிறன்று

மந்திகை, ஜூன்26

இலங்கைவங்கி பருத்தித்துறைக் கிளையின் பொன்விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் கே.பி. ஆனந்தநடேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை வீரவாகு கட்டடத்தில் நடைபெறவுள்ள இப் பொன் விழாவில் இலங்கை வங்கி வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் பீ.ஏ. அருமைநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவத் துறைப் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம், இலங்கை வங்கி வடமாகாண செயற்பாட்டு முகாமையாளர் என்.சிவரட்ணம், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், மருதங்கேணி உதவி அரச அதிபர் எஸ்.ஸ்ரீஸ்கந்தகுமார், பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் ஏ. நடராஜா, பிரதிக்கல்விப் பணிப்பாளர், எஸ்.நந்தகுமார் ஆகியோர் கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்வர். (202-218)

# மல்லாகம் நீதிமன்றுக்கு அண்மையில் பட்டப்பகலில் துணிகரக் கொள்ளை

வலி.வடக்கு, ஜூன்26

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்திற்கு சமீபமாக பட்டப்பகலில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரினால் சுமார் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் அறுத்துச் செல்லப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் அமைந்துள்ள வங்களா ஒழுங்கையில் இத் துணிகரமான திருட்டு இடம்பெற்றுள்ளது.

வலி.வடக்கு மல்லாகம் பிரதேச சபையில் கடமையாற்றும் பெண் ஒருவர் நண்பகல் உணவிற்காக சைக்கிளில் வீட்டிற்குச் சென்றுள்ளார்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தைத் தாண்டி சுமார் நூறு மீற்றர் தூரத்தில் உள்ள ஒழுங்கை வளைவினுள் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சைக்கிளில் சென்றவரின் கழுத்தில் இருந்த 9 பவுண் தாலிக்கொடி மற்றும் 2 பவுணுக்கு மேற்பட்ட நிறையுடைய சங்கிலியையும் அறுத்துக் கொண்டு மோட்டார்சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

இத் திருட்டுச் சம்பந்தமாக தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் உரியவர்களினால் முறையிடப்பட்டுள்ளது. (202-86)

### வலி.தென்மேற்கில் சீமெந்துத் தட்டுப்பாடு

வலி.தென் மேற்கு, ஜூன்26

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் சீமெந்துக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

தங்கள் வீடுகளைப் புனரமைப்பு செய்பவர்களும், இதர கட்டட வேலைகளை மேற்கொள்ளும் பொதுமக்களும் சீமெந்தை பெறமுடியாது சிரமப்பட்டு வருகின்றனர்.

# வேலணை கமநல கேந்திர நிலையத்திற்கு பெரும்பாக அலுவலர் 8 வருடங்களாக இல்லை

யாழ்ப்பாணம், ஜூன்26

வேலணை கமநல கேந்திர நிலையத்திற்குகடந்த 8 வருடங்களாகப் பெரும்பாக அலுவலர் நியமிக்கப்படவில்லை.

பெரும்பாக அலுவலரை நியமிக்கக் கோரி விவசாய சம்மேளனங்கள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரை கோரி வருகின்ற போதிலும் மேற்படி நியமனம் இடம்பெறவில்லை.

இதனால் பிரதேசத்தின் விவசாயத்துறை முன்னேற்றம் பாதிப்புறுவதாகவும் விரைவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பெரும்பாக அலுவலரை நியமிக்க முன்வரவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

மேற்படி விடயம் தொடர்பாக வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட விவசாய சம்மேளனங்கள் வேலணை பிரதேச செயலாளர் ஊடாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு மகஜர் சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-95)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 13 | 27.06.2008 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | நவமி |
| | மு.இ. 10.38 வரை |
| நட்சத்திரம் : | ரேவதி |
| | மு.இ. 10.30 வரை |
| சுபநேரம் | 06.05 - 07.25 |
| ராகுகாலம் | 10.25 - 11.55 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவையார் முற்றும் ஓதுதல்

சுழிபுரம்,ஜூன்26

மாணிக்கவாசக சுவாமி குருபூசை தினத்தன்று-எதிர்வரும் 6ஆம் திகதி-திருக்கோவையார் முற்றும் ஓதுதல் பண்ணாகம் விசுவத்தனை முருகன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

பஜனைச் சபையார் வெளியீடு செய்த திருக்கோவையார் நூல் இந்நிகழ்வில் வைத்து வழங்கப்படவுள்ளது. (202-28)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாலகிஷ்ணபிள்ளை சறோஜினிதேவி (றோசா)



402, கோயில் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலகிஷ்ணபிள்ளை சறோஜினிதேவி 24.06.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - இராஜலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கனகசபை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் பாலகிஷ்ணபிள்ளையின் (முன்னாள் விற்பனைப் பிரதிநிதி J.C.S {Ltd}) அன்பு மனைவியும் பாலகுமார் (ஜேர்மனி), பாலவதனி (ஆசிரியை, யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (அம்புலி போட்டோ) மற்றும் கமலாசினிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஜெசீலனின் (ஜேர்மனி) சிறிய தாயும் காலஞ்சென்ற கனகசபை மற்றும் நற்குணம், காலஞ்சென்ற சிவசக்திவேல் மற்றும் கைலைநாதன் (சுவிஸ்), பவானி அம்மா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் கலாநிதி (ஜேர்மனி), வாகினி (ஜேர்மனி), நிகேதன் (ஆசிரியர், யா/ஆனைக்கோட்டை றோ.க.த.பாடசாலை), சிவரஞ்சினி, சிவரஞ்சன், சிவராஜினி, சிவதர்சினி, சிவரூபன், சிவரமேஸ் ஆகியோரின் பாசமிகு மாமியும் அத்திரிஜா (ஜேர்மனி), ஆகாஸ் (ஜேர்மனி), தாரகா (ஜேர்மனி), தபிஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2008) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி செம்பாடு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*402, கோயில் வீதி,*
*நல்லூர்.*
(75725)

தகவல்:
**க.பாலகிஷ்ணபிள்ளை** (கணவர்),
**வ.நிகேதன்** (மருமகன்).

## திருமதி செல்லம்மா கணபதிப்பிள்ளை



யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற பிரபல தொழிலதிபர் க.க. கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவி திருமதி செல்லம்மா கணபதிப்பிள்ளை 23.06.2008 திங்கட்கிழமை இங்கிலாந்தில் சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நல்லம்மா, காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகசபை, கனகரட்ணம், காலஞ்சென்ற பாலசிங்கம், செல்வராசா (மாம்பழம்), சுவர்ணேஸ்வரி, ஜெகநாதன், லோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு அன்னையும் சந்தானலட்சுமி, தவமணி, அமுதராணி, கனகசிங்கம், கிரிஜா, ஸ்ரீபதி ஆகியோரின் பாசமிகு மாமியும் கேசவன், ஸ்ரீராம், தனுசியா, மஞ்சுளா, பிறேமலதா, கோபிதன், அஞ்சலா, சியாமளா, Dr.சதீசன், சாலினி, சசீலா, ஜெய்சன், கபிலன் ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் கம்சத்வனி, யூரணியன், மயூரிகா, அஷ்வினி ஆகியோரின் அன்பான பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.06.2008 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*14,இராச வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (75726)

தகவல்:
க.கனகரட்ணம் *(மகன்).*

## *யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமா பரீட்சை*

யாழ்ப்பாணம்,ஜூன்26

யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் டிப்ளோமா பரீட்சை எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இறுதியாண்டு மாணவருக்கான முதல் அரையாண்டு பரீட்சையே அன்றைய தினம் ஆரம்பித்து நடைபெறவுள்ளது. எதிர்வரும் 2ஆம் திகதி வரை நான்கு தினங்கள் பரீட்சை நடைபெறும்.

முதலாம் ஆண்டு மாணவர்களுக்குரிய முதல் அரையாண்டு பரீட்சை கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும். (202-302)

## பிரான்பற்றில் தொழிற்பயிற்சி நிலையம்

யாழ்ப்பாணம்,ஜூன்26

பண்டத்தரிப்பு - பிரான்பற்றில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கப்படவுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

கனேடிய உலகப் பல்கலைக்கழக அமைப்பு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு என 7 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கான காணியை பிரான்பற்று மக்கள் நலன்புரிச் சங்க தலைவர் சி.மகேந்திரம், செயலாளர் க.கிருஸ்ணலிங்கம் ஆகியோர் இணைந்து - 2¼ பரப்புக் காணியை பிரதேச செயலருக்கு வழங்கியுள்ளார்.

விரைவில் தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கையை பிரதேச செயலாளர் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202-95)


### பாரஹூர்தி சாரதி தேவை

**சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் ஆவணங்களுடன் உடன் தொடர்புகொள்ளவும்.**

**துவாரகன் காட்வெயார்,**
*புகையிரத வீதி, சுன்னாகம்.*
T.P.: 021-4591833 (75733)

### காணி விற்பனைக்கு

புத்தூர் வடக்கு, புத்தூரில்-சுன்னாகம் வீதியில் 3½ பரப்புக் காணி கிணற்றுப் பங்குடன், வாகனங்கள் சென்றுவர பாதையுடன் கூடியது. உடன் விற்பனைக்கு.

தொடர்பு: **விஜி கடை,**
*சுன்னாகம் றோட், புத்தூர் வடக்கு.*
T.P.: 077 9789368 (75723)


### தவறிவிட்டது

நாவற்குழி, கைதடி என்னும் முகவரியுடைய வேல்முருகன் தேவரஞ்சன் என்பவரது தேசிய அ.அட்டை (831572183V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (75730)


### விற்பனைக்கு

**நல்ல நிலையில் பாவனையில் உள்ள 24 SRI தொடர் இலக்கத்தைக் கொண்ட ISUZU லொறி விற்பனைக்குண்டு.**

**குறிப்பு:** மண், கப்பல் பெர்மிட்டுக்களுடன்.

தொடர்புகளுக்கு: **021 226 3891**
(75731)


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

# கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி - 27.06.2008 - 09.07.2008 பி.ப. 2 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி - 10.07.2008 நண்பகல் 12 மணிவரை
கேள்வி திறந்து பார்க்கும் திகதி - 10.07.2008 பி.ப. 1.30 மணி

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவுத் தரம் |
|---|---|---|---|
| 1. ஏழாலை கேசாவத்தை நாச்சியப்புலம் வீதி, இரண்டாம் தடவை தாரிடல் | 2600.00 | 575.00 | M8 |
| 2. சுன்னாகம் தில்லை கட்டி வீதி, இரண்டாம் தடவை தாரிடல் | 3500.00 | 575.00 | M8 |
| 3. சுன்னாகம் கதிரமலை வீதி இரண்டாம் தடவை தாரிடல் | 5000.00 | 575.00 | M8 |
| 4. சுன்னாகம் சட்டத்தரணி செல்லத்துரை வீதி இரண்டாம் தடவை தாரிடல் | 4500.00 | 575.00 | M8 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் குறிக்கப்பட்ட "இக்ராட்" தரத்திற்கு பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்பத்திரத்தின் மூலப்பிரதி *"செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்"* என்ற முகவரிக்கும் அதன் பிரதியை *"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் "* என்ற முகவரிக்கும் உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல்வேண்டும் மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
24.06.2008 (சி/553498)

**திருமதி ச.சொக்கலிங்கம்**
செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை திருமதி பாலவதனி நிகேதன் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி சறோஜினிதேவி கிருஷ்ணபிள்ளை**

அவர்களின் பிரிவையிட்டு துயரடைந்திருக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறுவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*பாடசாலைச் சமூகம்,* **யா/முத்துத்தம்பி ம.வி.** (75719)

## கண்ணீர் அஞ்சலி



நேற்று நீ கற்ற வகுப்பு நினைவுகள்,
நெஞ்சினை விட்டு நீங்கு முன்னரே,
காற்றிலே கலந்த துயரமான செய்தி கேட்டு,
கலங்கிய உள்ளங்கள் ஆயிரம்! ஆயிரம்!!
நம் நெஞ்சில் அகலா விளக்காய்
நீ மீளாத் துயிலாயினாய்.......

*இவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

**காசிநாதர் பிரசாத்**

(விளையாட்டு விஞ்ஞான அலகு, யாழ்.பல்கலைக்கழக 3ஆம் வருட மாணவன்)

**விளையாட்டு விஞ்ஞான அலகு, யாழ்.பல்கலைக்கழகம்.**

## கண்ணீர் அஞ்சலி



சைவத்திற்கும் தமிழுக்கும் சமூகத்திற்கும் தொண்டாற்றி பெருமை பெற்ற சிவத்தமிழ்ச்செல்வி

**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

யா/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி, தெல்லிப்பழை.
அதிபர், ஆசிரியர் கழகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.
(75719)

## கண்ணீர் அஞ்சலி



*எமது உற்ற நண்பனும் சக விரிவுரையாளருமான*

**கலாநிதி பிறின்ஸ் ஜெயதேவன்**

*அவர்களின் அன்புத் தந்தை*

**கலாநிதி செல்லப்பா ஜெயரத்தினம்**

*அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் எமது உற்ற நண்பனுக்கும் அவரது ஏனைய குடும்ப உறுப்பினர்களிற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

**விரிவுரையாளர்கள், நண்பர்கள்,**
**விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.**
(75711)

## கண்ணீர் அஞ்சலி



*எமது இரசாயனவியற்றுறையின் சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி J.P.ஜெயதேவன் அவர்களின் அன்புத் தந்தை*

**கலாநிதி செல்லப்பா ஜெயரத்தினம்**

*அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**துறைத்தலைவர், விரிவுரையாளர்கள், ஊழியர்கள்,**
**இரசாயனவியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம்.**
(75712)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**வேலன் இராமசாமி**

மலர்வு
27-07-1922

மறைவு
26-06-2006

திதி: 26.06.2008

**அன்பின் தீபமானவரே!**
**பண்பின் உயர்விடமாய்**
**பரிவுடனே எமை வளர்த்து**
**இரண்டு ஆண்டுகள் உருண்டு ஓடினும்**
**அணையாத தீபம் தான்**
**என்றும் உங்கள் நீங்காத நினைவலைகளுடன்.**


*423(105), ஸ்ரான்லி றோட்,*
*யாழ்ப்பாணம்.* (75718)

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மேற்கிந்தியத் தீவுகளுடனான முதலாவது ஒருநாள் போட்டி

# புதுமுகம் மார்ஷின் கலக்கலில் வாகைசூடியது ஆஸ்திரேலியா



கிங்ஸ்ரவுண், ஜூன் 26

புதுமுக வீரரான ஷோன் மார்ஷ் சிறப்பாக ஆடி 81 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுக்க, மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 84 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியைப் பதிவு செய்தது.

மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ள ஆஸ்திரேலிய அணி தற்போது 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்றுவருகின்றது. தொடரின் முதல் போட்டி நேற்றுமுன்தினம் கிங்ஸ்ரவுணில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் ஆஸ்திரேலிய அணி சார்பாக ஷோன் மார்ஷ் புதுமுக வீரராக இடம்பெற்றிருந்தார். இந்தியாவில் நடைபெற்ற ஐ.பி.எல். போட்டிகளில் சிறப்பாகப் பிரகாசித்தமையைத் தொடர்ந்து அவருக்கு தேசிய அணியில் வாய்ப்புக் கிடைத்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. ஆஸ்திரேலிய அணியின் ஆரம்ப வீரர்களாக ஷோன் மார்ஷ், ஷேன் வட்ஸன் ஆகியோர் களமிறங்கினர். இந்த ஜோடி ஆரம்பத்திலிருந்தே அதிரடியாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தது. 13 ஓவர்களில் 75 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றிருந்த நிலையில், வட்ஸன் 31 ஓட்டங்களுடன் (27 பந்துகள், 4 பவுண்டரிகள்) விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

தொடர்ந்து வந்த அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் வெறும் 5 ஓட்டங்களுடனும், துணை அணித்தலைவர் மைக்கல் கிளார்க் 9 ஓட்டங்களுடனும் விக்கெட்டுகளைப் பறிகொடுத்தனர். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஷோன் மார்ஷ் 81 ஓட்டங்களுடன் டரன் சமியின் வேகத்தில் சரணடைந்தார். 97 பந்துகளை எதிர்கொண்ட அவர், ஒரு சிக்ஸர் மற்றும் 7 பவுண்டரிகளையும் தனது ஓட்டஎண்ணிக்கையில் சேர்த்திருந்தார்.

5ஆவது விக்கெட்டில் மைக்கல் ஹசே - பிரட் ஹடின் ஜோடி சிறப்பாக ஆடியது. இந்த ஜோடி தம்மிடையே 91 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றிருந்த நிலையில் பிரட் ஹடின் 50 ஓட்டங்களுடன் (52 பந்துகள், 4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்) சுலைமான் பென்னின் சுழலில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து மைக்கல் ஹசேயும் 44 ஓட்டங்களுடன் கிறிஸ் கெய்லின் சுழலுக்கு இரையானார்.

50 ஓவர்கள் முடிவில் ஆஸ்திரேலிய அணி 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 273 ஓட்டங்களைக் குவித்தது. பிரட் லீ 12 ஓட்டங்களுடனும், மிற்செல் ஜோன்ஸன் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சில் டரன் சமி மற்றும் பிராவோ ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றினர். ஜெரோமி ரெய்லர், கிறிஸ் கெய்ல், சுலைமான் பென், சர்வான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இலக்கைக் கலைத்த மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு ஆரம்பம் சரியாக அமையவில்லை. அந்த அணியின் ஆரம்ப வீரர்களான சேவியர் மார்ஷல் 6 ஓட்டங்களுடன் பிரட் லீயின் வேகத்திலும், கிறிஸ் கெய்ல் 20 ஓட்டங்களுடன் நதன் பிரக்கனின் வேகத்திலும் விக்கெட்டுகளைப் பறிகொடுத்தனர்.

தொடர்ந்து வந்த வீரர்களும் சொதப்பல் ஆட்டம் ஆடி வெறுப்பேற்றினர். சர்வான் (2), பிளெட்சர் (26), டவயினி பிராவோ (33), போலாட் (11), ராம்டீன் (31), டரன் சமி (33) ஆகியோர் விரைவாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்து ஏமாற்றமளித்தனர்.

இறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 39.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 189 ஓட்டங்களை மட்டுமே பெற்று 84 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது. ஆஸ்திரேலிய அணியின் பந்துவீச்சில் பிரக்கன் 4 விக்கெட்டுகளையும், பிரட் லீ 2 விக்கெட்டுகளையும், ஜோன்ஸன், மைக்கல் கிளார்க், வட்ஸன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஷோன் மார்ஷ் தெரிவுசெய்யப்பட்டார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி நாளை நடைபெறவுள்ளது.

## அஸ்ரபுல் சதம் விளாசல் பங்களாதேஷ் வெற்றி!

லாகூர், ஜூன் 26

லாகூரில் நடந்த ஆசியக் கிண்ணத் தொடருக்கான முதலாவது லீக் போட்டியில் பங்களாதேஷ் அணி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை 96 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. அணித்தலைவர் முகமது அஸ்ரபுல் சதம் விளாசி அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றினார்.

50 ஓவர்களில் பங்களாதேஷ் அணி 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 300 ஓட்டங்களைக் குவித்தது. கடின இலக்கை விரட்ட களமிறங்கி அரபு எமிரேட்ஸ் அணி 45.4 ஓவரில் 204 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி, 96 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. பங்களாதேஷ் அணித்தலைவர் அஷ்ரபுல் ஆட்ட நாயகன் விருதைப் பெற்றார்.

## தன்வீரின் சகலதுறை ஆட்டம் கைகொடுக்க ஹொங்கொங்கை வீழ்த்தியது பாகிஸ்தான்!

கராச்சி, ஜூன் 26

ஆசியக் கிண்ண லீக் போட்டியில் சொகைல் தன்வீரின் சகலதுறை ஆட்டம் கைகொடுக்க, ஹொங்கொங்கை 155 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் வீழ்த்தியது.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை உட்பட ஆறு நாடுகள் கலந்து கொள்ளும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. கராச்சியில் நடைபெற்ற தொடரின் இரண்டாவது லீக் ஆட்டத்தில் ஹொங்கொங் அணியை எதிர்த்தாடியது பாகிஸ்தான். நாணயச் சுழற்சியில் வென்ற சொய்ப் மலிக் தனது அணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

பாகிஸ்தான் அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. ஓட்டம் எதுவும் எடுக்கும் முன்னரே சல்மான் பட்டின் விக்கெட்டை இழந்தது. அடுத்து சொய்ப் மலிக்(35), முகமது யூசுப்(28) ஆகியோரும் விரைவில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

எனினும், அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய யுனிஸ்கான் தனது 33ஆவது அரைச்சதம் கடந்து அணிக்கு நம்பிக்கை கொடுத்தார். இவர் 67 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது நதீம் அகமதுவின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க பாகிஸ்தான் சரிவைச் சந்திக்க ஆரம்பித்தது.

8ஆவது விக்கெட்டில் ஜோடி சேர்ந்த பவாட் அலாம் - சொகைல் தன்வீர் ஆகியோர் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். இந்த ஜோடியின் சிறப்பான ஆட்டத்தால் 8 விக்கெட்டில் 100 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டன. அதிரடியாக ஆடிய சொகைல் தன்வீர் 55 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 59 ஓட்டங்களை விளாசினார். 50 ஓவர்கள் முடிவில் பாகிஸ்தான் அணி 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 288 ஓட்டங்களைக் குவித்தது. பவாட் அலாம் 63 ஓட்டங்களுடனும், அஞ்சும் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்துவீச்சில் ஹொங்கொங்கின் நதீம் அகமது 4 விக்கெட்டுகளையும், இர்பான் அகமது 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

இமாலய இலக்கைத் துரத்திய ஹொங்கொங் அணி தொடக்கத்திலேயே அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து திணறியது. ஹொங்கொங்கின் டபாரக் தர் 'ரிட்டையார்ட் ஹேர்ட்' முறையில் வெளியேறி மீண்டும் ஆட வந்தார். ஆனால் அப்ரிடி சுழலில் டபாரக் தர் (24) வீழ்ந்தார்.

அணி சார்பாக அப்பாஸ் மட்டும் அதிகபட்சமாக 26 ஓட்டங்களைச் சேர்த்து 'ரிட்டையார்ட் ஹேர்ட்' மூலம் வெளியேறினார். அனுபவம் இல்லாத வீரர்கள் அடுத்து அடுத்து ஆட்டமிழக்க, ஹொங்கொங் அணி 37.2 ஓவர்களில் 133 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்து 155 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

## சிம்பாப்வேத் தேர்தல் முடிவுகளை அமெரிக்கா அங்கீகரிக்கமாட்டாது

வாஷிங்ரன், ஜூன் 26

"சிம்பாப்வேயில் நாளை வெள்ளிக்கிழமை மீள நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் அமெரிக்காவால் அங்கீகரிக்கப்படமாட்டா. எதிர்க்கட்சி உறுப்பினர்களின் உரிமைகளை நசுக்கியும், அவர்களை அச்சுறுத்தியும் தன்னிச்சையாக நடத்தப்படும் ஒரு தலைப்பட்சமான தேர்தல் இதுவாகும்"

- இவ்வாறு அமெரிக்க வெளிவிவகார திணைக்கள சிரேஷ்ட அதிகாரி ஜென்டேயி பிரேசர் தாம் பி.பி.ஸி. செய்திச் சேவைக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

றொபேட் முகாபே தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டார் என அறிவிக்கப்படலாம். எனினும் இது சட்டபூர்வமான வெற்றியாக அமையாது என்றும் அவர் சுட்டக்காட்டியுள்ளார்.

"எதிர்க் கட்சியை அச்சுறுத்தி ஒடுக்கிவிட்டு வெள்ளிக்கிழமை, சிம்பாப்வேயில் மீள ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட விருக்கிறது. வாஷிங்ரன் இதன் முடிவுகளை ஏற்கவோ, அங்கீகரிக்கவோ மாட்டாது." - என ஆபிரிக்க விவகாரங்களுக்கான அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்கள உப செயலாளர் பிரேஸர் தம் பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார்.

சிம்பாப்வேயில் தலைதூக்கியுள்ள நெருக்கடிகளுக்கு எதிரான கண்டனங்கள் சர்வதேச மட்டத்தில் அதிகரித்துள்ளன. இச் சந்தர்ப்பத்தில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள சிரேஷ்ட உபசெயலாளர் பிரேஸரின் அதிருப்தியும் கண்டனமும் வெளியாகியுள்ளன.

தங்கள் தலைமைத்துவத்துக்கு வாக்களிப்பதற்கான உரிமைகளைப் பயன்படுத்த முனையும் ஆதரவாளர்கள் தாக்கப்படுகிறார்கள். உயிராபத்துக்கு ஆளாகிறார்கள். இந்நிலையில் நடத்தப்படும் தேர்தல் முடிவுகள் எம்மால் அங்கீகரிக்கப்பட மாட்டாவென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிம்பாப்வேயில் தலைதூக்கியுள்ள அரசியல் நெருக்கடிகள் தொடர்பாக தென்னாபிரிக்க அபிவிருத்தி சமூக பிராந்திய அமைப்பின் தலைவர்கள் சுவாஸிலாந்தில் கூடி விவாதிக்க விருக்கிறார்கள். அதேவேளை பதவியிலிருந்து விலகிக் கொள்வதற்காக ஜனாதிபதி முகாபேக்கு அயல்நாடுகள் அழுத்தம் கொடுக்கலாம் என சிம்பாப்வே எதிர்க்கட்சி நம்பிக்கை கொண்டுள்ளது.

## நவாஸ் ஷெரீப்பின் சார்பில் பாக். அரசு மேன்முறையீடு தீர்ப்பு வெளியாகும் வரை இடைத்தேர்தல் ஒத்திவைப்பு

இஸ்லாமாபாத், ஜூன் 26

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப், இடைத்தேர்தலில் போட்டியிடத் தடை விதித்து லாகூர் மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் அரசு மேன்முறையீடு செய்துள்ளது.

இந்த மேன்முறையீட்டின் மீதான தீர்ப்பு வெளியாகும் வரை இன்று நடைபெறவிருந்த இடைத் தேர்தலை ஒத்திவைப்பதாக உச்ச நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

ஜூன் 26 ஆம் திகதியான இன்று பாகிஸ்தானில் நாடாளுமன்ற இடைத் தேர்தல் நடைபெறவிருந்தது. அதில் போட்டியிட நவாஸ் ஷெரீப் திட்டமிட்டிருந்தார். ஆனால், அவர் போட்டியிட லாகூர் உயர் நீதிமன்றம் தடை விதித்தது. அவரது கட்சியைச் சேர்ந்த எம்.பிக்கள் இதைக் கண்டித்து லாகூர் வீதிகளில் கண்டனப் பேரணிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

அரசு சார்பில் நேற்று உச்சநீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து இன்று நடைபெறவிருந்த இடைத் தேர்தலை உச்ச நீதிமன்றம் ஒத்திவைப்பதாக அறிவித்தது. மேன்முறையீட்டின் மீதான விசாரணை எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

## பாக். தலிபான்களால் கடத்தப்பட்ட 22 பழங்குடியினர் சடலங்களாக மீட்பு

இஸ்லாமாபாத், ஜூன் 26

வடமேற்குப் பாகிஸ்தானில் கடந்த திங்கட்கிழமை உள்ளூர் தலிபான் போராளிகளால் கடத்தப்பட்ட 22 பழங்குடியின ஆண்களின் சடலங்கள் நேற்றுப் புதன்கிழமை, அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டன.

தென் வசிரிஸ்தான் மாவட்டத்திலுள்ள ஜென்டோலோ நகரிலிருந்து இவர்கள் கடத்தப்பட்டார்கள். பாகிஸ்தானின் உயர்மட்ட தலிபான் தலைவரான பெய்த்துல்லா மெஹ்சூட்டுக்கு விசுவாசமான தலிபான் போராளிகளால் அவர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள்.



கடத்தப்பட்டவர்கள் அனைவரும் பிட்டானி என்னும் பழங்குடி மக்களின் சேர்ந்தவர்கள். இவர் அரசுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வந்தவர்கள் என அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

பழங்குடி மக்களின் குழுவுக்கும் உள்ளூர் தலிபான் குழுவுக்கு மிடையே திங்கட் கிழமை கடும் சண்டை மூண்டது. இதில் 12 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 8 தலிபான்களும், 2 பெண்களும், 2 பிள்ளைகளும் அடங்குவர். இதையடுத்து அரசுக்கு ஆதரவான 30 பழங்குடியின ஆடவர்களைக் கொண்ட குழுவின் 22 பேர் கடத்தப்பட்டு விட்டார்கள் என ஜென் டோலோ நிர்வாக அதிகாரி பரக்கதுல்லா கூறினார்.

கடத்தப்பட்ட 22 பேரின் துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்த சடலங்கள், ஜென் டோலோ பிராந்திய பள்ளத்தாக்கொன்றில் கிராமவாசிகளால் கண்டுபிடிக்கப்பட்டன. அவர்கள் கொடுத்த தகவலை அடுத்து அப்பகுதிக்கு அதிகாரிகள் விரைந்தார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதிகாரிகள் சடலங்களைக் கண்டு, அடையாளங்களை உத்தரவாதப் படுத்தினார்கள். இராணுவம் பதில் நடவடிக்கைகளை எடுக்கக் கூடும் என்ற அச்சத்தில் தற்போது, போராளிகள் [illegible] ள்ளார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## அமெ. இராணுவத் தளபதியாக முதன் முறையாக ஒரு பெண்

அமெரிக்க இராணுவத் தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் ஆன் டன்வுடி நியமிக்கப்பட்டிருக்கிறார். அமெரிக்க வரலாற்றில் இராணுவத் தளபதியாக ஒரு பெண் நியமிக்கப்படுவது இதுவே முதன் முறையாகும். டன்வுடி இராணுவத்தில் 33 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார். அவருக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டு நான்கு நட்சத்திரத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் தளபதியாக நியமிக்கப்பட்டு இருப்பது வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று இராணுவ அமைச்சர் றொபேட் கேட்ஸ் பாராட்டியுள்ளார். பதவி உயர்வுக்கு முன்னர் இராணுவ வீரர்களுக்கு தளபாடங்களை வழங்கும் இராணுவத் தளபாடப் பிரிவில் துணைத் தளபதியாக இருந்து வந்தார். அவர் தளபதியாக நியமிக்கப்பட்டமையை செனட் உறுதி செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழி ஆசிரியர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு

# மகரகம, களுத்துறை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் ஆங்கில மொழி மூலக் கற்கை நெறிகள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூன் 26

தமிழ்மொழி ஆசிரியர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு கொழும்பின் புறநகர்ப் பகுதியான மகரகம மற்றும் களுத்துறையில் அமைந்துள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் ஆங்கில மொழி மூலக்கற்கை நெறி மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

மகரகம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மற்றும் களுத்துறை தேசியக் கல்லூரியில் பயிற்சிகள் பெற்றுவந்த ஆசிரியர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

மகரகம ஆசிரியர் கலாசலையில் ஆங்கில மொழிமூல கற்கைநெறிப் பயிற்சியினை மேற்கொண்டுவந்த வடபகுதியைச் சேர்ந்த இரண்டு பெண்கள் உட்பட நான்குபேர் கொழும்பில் கைது செய்யப்பட்டிருந்தனர். இதனையடுத்தே கல்வி அமைச்சு இந்த நடவடிக்கையை எடுத்ததாகக் கூறப்பட்டது.

இந்த முடிவைக் கல்வி அமைச்சு எடுக்கவில்லை என்றும் பாதுகாப்பு அமைச்சே எடுத்தது என்று கல்லூரி நிர்வாகம் தெரிவித்ததாக பயிற்சி பெற்றுவந்த ஆசிரியர் ஒருவர் பி.பி.ஸியிடம் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சிக் கல்லூரியில் சிங்கள மற்றும் தமிழ் ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினரின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்குத் தேவையான ஆயுதத் தளபாட விவரங்கள் ஆகியன குறித்துத் தீர்மானிக்கும் என்று தெரிகின்றது.

இந்தப் பணிக்காக மூவாயிரம் இந்தியப் படையினர் கொழும்பு வரவுள்ளனர் என இணையத்தளம் ஒன்றில் வெளியான செய்தியை இந்தியத் தூதரக வட்டாரங்கள் 'மிகைப்படுத்தப்பட்ட தகவல்' எனக் குறிப்பிட்டு நிராகரித்துள்ளன.

"ஒரு நாட்டுக்கு இன்னொரு நாட்டுத் தலைவர் விஜயம் செய்யும்போது இத்தகைய உதவியாளர்களும், மெய்க்காவலர்களும் சேர்ந்து வருவது வழமையே. கொழும்பு நிலைமையைக் கவனத்தில் கொண்டு பிரதமர் மன்மோகன் சிங்கின் பாதுகாப்புக்கு வழமைக்கு மாறாக சற்றுக் கூடுதலான படையினர் வருவர். ஆனால் இத்துணை எண்ணிக்கையில் அல்ல." - என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அண்மையில் கொழும்பு வந்திருந்த இந்திய உயரதிகாரிகள் குழு, கொழும்பில் அதிகாரிகளோடு நடத்திய பேச்சுகளின் போது இவ்விடயமும் பேசி முடிவு காணப்பட்டது என்பதை அந்த வட்டாரங்கள் ஒப்புக்கொண்டன.

இந்தியப் பிரதமர் கொழும்பில் தங்கியிருக்கும் காலத்தில் கொழும்புக்கு அருகே உஷார் நிலையில் இந்தியக் கடற்படை அணி ஒன்று தயாராக இருக்கும் என்றும், இதுவும் நாடுகளுக்கிடையிலான தலைவர்களின் விஜயங்களின்போது செய்யப்படும் சாதாரண முன்னேற்பாடுகளில் ஒன்று தான் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சனிக்கிழமை ஆரம்பமாக இருந்தன. இந்தப் போட்டிகள் அடுத்த மாதம் (ஜூலை) 4 ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடாகி இருந்தது.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக 319 பேர் கொண்ட முதலாவது அணியினர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து கப்பல் மூலம் திருமலைக்குப் புறப்பட்டனர்.

அவர்கள் நேற்று திருகோணமலையைச் சென்றடைந்த போது, பாதுகாப்புக் காரணமாக போட்டிகள் ஒத்தி வைக்கப் பட்டுள்ளதாக அவர்களுக்கு அறிவிக்கப் பட்டது.

அதனை அடுத்து அவர்களை இன்று மாலை கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு திருப்பி அனுப்புவதற்கு மாகாண சபை ஏற்பாடு செய்துள்ளது.

மாணவர்கள் மற்றும் அவர்களுடன் கூடச் சென்றவர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, திருகோணமலை மக்கெயர் விளையாட்டரங்கில் அவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அங்கு இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

விளையாட்டரங்கில் தங்கியுள்ள மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான உணவு வசதிகள் உட்பட சகல வசதிகளையும் மாகாண சபை அதிகாரிகள் வழங்கியிருந்தனர்.

திருகோணமலையில் இருந்து இன்று மாலை புறப்படும் கப்பலில் இவர்களை யாழ்ப்பாணம் அனுப்புவதற்கு மாகாண சபை ஏற் பாடு செய்துள்ளது என்று நேற்றிரவு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

மாகாணமட்டப் போட்டிகள் செப்ரெம்பர் மாதம் வரை பிற்போடப்பட்டுள்ளதாக மாகாணசபை வட்டாரங்கள் 'உதயனு'க்கு நேற்றிரவு தெரிவித்தன.

(அ-01-150)

## நெடுங்கேணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அமுக்கவெடியில் பொதுமக்கள் சென்ற 'ட்ராக்டர்' சிக்குண்டது எனவும் இதில் மாணவனான சேனாதிராசா செந்தூரன் (வயது-16) என்பவர் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

மாணவனின் தந்தையான வேலுப்பிள்ளை சேனாதிராசா மற்றும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களான விநாயகமூர்த்தி பிரதீபன் (வயது-26) விநாயகமூர்த்தி பிரதாபன் (வயது - 16), விநாயகமூர்த்தி பிரகாஸ் (வயது - 15) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ-சி)

## அரிசி விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கான அமைச்சரவை உப குழுவின் கூட்டத்தின் போதே ஜனாதிபதி இந்த உத்தரவை வர்த்தக சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, நுகர்வோர் அமைச்சுக்கு வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதிகரித்துவரும் அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதற்காக, ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை அடுத்த வாரம் முதல் கூட்டுறவுக் கடைகள் மூலம் மக்களுக்கு வழங்குவதெனவும் அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. கிலோ 60 ரூபாவுக்கு இவ்வரிசி வழங்கப்படும்.

குறிப்பிட்ட அரிசியைக் கொள்வனவு செய்வதற்காகக் கூட்டுறவுக் கடைகளுக்கு கடன் வசதியும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை இவ்விலைகுறைப்புக் காரணமாக உள்ளூர் விவசாயிகள் பாதிக்கப்படாத நிலையை உறுதிசெய்யுமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(உ)

## புலிகள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் தற்போதைய நிலை தொடர்பாகப் பேச்சு நடத்துவதற்காக இந்திய அரச உயர் மட்டத்தினர் மூவர், இலங்கை வந்து ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தி விட்டுச் சென்றனர்.

புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் யுத்தத்தை நிறுத்துவதற்காகவே அவர்கள் இலங்கை வந்தனர் என்று ஜே.வி.பி.குற்றம் சுமத்துகின்றது.

### யுத்தத்தை நிறுத்துமாறு இந்தியா கூறவில்லை

இலங்கை அரசு புலிகளுடன் அமைதிப் பேச்சில் ஈடுபட வேண்டும் என்று இந்திய அரசு விரும்புவது உண்மைதான். ஆனால், அதற்காக அவர்களின் வருகை யுத்தத்தை நிறுத்துவதை நோக்காகக் கொண்டது என்று சொல்ல முடியாது.

புலிகள் ஆயுதங்களை கீழே வைக்காத வரை அவர்களுடன் நாம் பேச்சு நடத்தப் போவதில்லை என்பதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்திய அதிகாரிகளிடம் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார்.

அதுதான் அரசின் உண்மையான நிலைப்பாடு அந்த நிலைப்பாட்டில் அரசு உறுதியாகவேயுள்ளது.

புலிகளுடன் பேச வேண்டுமென்று இந்தியா விரும்பினாலும் கூட எமது நிபந்தனையைப் புலிகள் ஏற்காவிட்டால் இந்தியாவின் அந்த விருப்பம் நிறைவேறப் போவதில்லை.

மாறாக பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் தொடர்ந்த வண்ணமேதான் இருக்கும். இதில் எந்த மாற்றமுமில்லை.

யுத்தகளத்தில் அரசு இப்போது மிகப் பலமாக உள்ளபோது அரசு எதற்கும் அஞ்சப் போவதில்லை. - என்றார். (அ-சி)

# ஜனாதிபதி ஆணைக்குழுவிலிருந்து கலாநிதி நேசையா நேற்று விலகினார்

கொழும்பு, ஜூன் 26

பதினைந்து முக்கிய மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து கலாநிதி தேவநேசன் நேசையா நேற்று விலகியுள்ளார்.

தமது பதவி விலகல் கடிதத்தை அவர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார்.

கலாநிதி தேவநேசன் நேசையா பாதிக்கப்பட்ட மக்களுக்காக செயற்படும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் தொடர்புகளைக் கொண்டவர் என சட்டத்தரணி கோமின் தயாசிறி, ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார்.

இந்த அமைப்புடன் தொடர்புடையவர் என்ற காரணத்தினால் அவரை ஜனாதிபதி ஆணைக்குழுவின் அங்கத்தவர் பதவியிலிருந்து விலகுமாறு ஜனாதிபதி சில நாள்களுக்கு முன்னர் கேட்டிருந்தார்.

ஜனாதிபதி ஆணைக்குழு உறுப்பினர் பதவியிலிருந்து நேற்று முதல் தாம் விலகுவதாக கலாநிதி தேவநேசன் நேசையா அறிவித்துள்ளார்

(அ-1)

# செங்கலடிப் பிரதேச சபைத் தலைவரும் மற்றும் மூவரும் பொலிஸாரால் கைது

## கொலை, கடத்தல்களில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில்

கொழும்பு, ஜூன் 26

மட்டக்களப்பில் கொலை, கடத்தல் மற்றும் கப்பம்பெறல் போன்ற குற்றச் செயல் களில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தில் ஈ.பி.டி.பி யின் செங்கலடிப் பிரதேசத் தலைவரும், கோரளைப்பற்று பிரதேசசபை உறுப்பினருமான ரவி என்பவரை ஏறாவூர் பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர்.

செங்கலடியில் உள்ள ஈ.பி.டி.பியின் அலுவலகத்தில் வைத்து இவர் கைதுசெய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நேற்று முன்தினமும் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த மற்றும் மூவரும் செங்கலடியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டனர் என்று தெரிவிக்கும் ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.பி.ரத்நாயக்க, இவர்கள் ஆள்களைக் கடத்தல், கொலை மற்றும் கப்பம் பெறல் போன்ற செயற் பாடுகளில் ஈடுபட்டு வந்தனர் என்றும் குறிப்பிட்டார்.

இவர்கள் நால்வரும் நேற்றுக் காலை மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு நீதிவானின் உத்தரவின்படி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். (அ -சி)

## அந்திரக்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவுகள் வந்த பின்னரே மீண்டும் அமெரிக்கத் தூதரகம் திறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கத் தூதரகத்தின் பாதுகாப்புச் செயலராக கடந்த சில நாள்களுக்கு முன்னர் லெப்.கேணல் லோறன்ஸ் ஏ.சிமித் நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## மணலாறில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகளின் பதுங்கு குழிகள் மீது நேற்றுப் பிற்பகல் 1.15 மணியளவில் எம்.ஐ.24 ரக ஹெலிக்கொப்டர்கள் ரொக்கட் தாக்குதல்களை நடத்தின என்று படைத் தரப்பில் கூறப்படுகின்றது.

இதேவேளை, பிற்பகல் 1.45 மணியளவில் யாழ்ப்பாணம், முகமாலையில் இருந்து தெற்கே மூன்று கிலோமீற்றர் தொலைவில் உள்ள விடுதலைப் புலிகளின் ஆட்லறித் தளங்கள் மீது கிபிர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின என்றும் படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது. (சி)

## தெஹிவளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெஹிவளை, இனிஷியம் வீதியில் அமைந்துள்ள 'சிரா கன்ஸ்ரக்ஷன்' கல்வி நிலையத்தில் கற்றல் செயற்பாடுகளை முடித்துக்கொண்டு வீடு திரும்பும் வழியில் மாலை 5.10 மணியளவில் இவர் காணாமற்போயுள்ளார் என்று அவரது உறவினர்களால் முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை வத்தளை , ரத்தரம வத்த பகுதியில் வசித்த 31 வயதுடைய விவேகானந்தன் கிருஷ்ணகுமார் மற்றும் அவருடைய சகோதரரான 27 வயதுடைய விவேகானந்தன் ரஜினிகுமார் ஆகிய இருவரும் வெள்ளை வானில் வந்த ஆயுததாரிகளால் கடத்தப்பட்டுள்ளனர்.

இவர்களது வீட்டுக்கு சிவில் உடையில் வந்த சிலர் சுமார் மூன்று மணிநேரம் சோதனையிட்டனர் -

அதன் பின்னர் அவர்கள் இருவரினதும் கண்களைக்கட்டி விசாரணைக்காக கொண்டு சென்றனர்.

சிவில் உடையில் வந்தவர்கள் தாங்கள் வத்தளைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சி.ஐ.டியினர் என்று கடத்தப்பட்டவர்களின் உறவினர்களிடம் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக வத்தளை மற்றும் தெஹிவளைப் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமக்குக் கிடைத்த இம்முறைப்பாடுகள் மேல் நடவடிக்கைகளுக்காக மக்கள் கண்காணிப்புக் குழுவின் காணாமல் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன என்று மக்கள் கண்காணிப்புக் குழு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (சி)

## யாழ்.மருத்துவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமர நாயக்க இவ்வாறு நேற்று 'உதயனுக்'குத் தெரிவித்தார்

யாழ். பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக வினாவியபோதே அவர் இவ் விதமாகக் கூறினார்

யாழ். மருத்துவ பீடத்துக்கான அனுமதி குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நூறு மாணவர்களுக்கு அனுமதி வழங்குவதற்கான வளங்கள், வசதிகள் உள் ளன.

அந்த அனுமதிகள் இனவிகிதாசார அடிப்படையில் கடந்த காலங்களில் வழங் கப்பட்டன. ஆனால் அனுமதி வழங்கப் பட்ட சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் அங்கு கல்வி பயில் பின்னடிப்பதால் முழுமையான கோட்டாவான நூறு மாணவர்களையும்- அனுமதிக்க முடியவில்லை.

இம்முறை இன விகிதாசார அடிப்படையில் நூறு மாணவர்களை யாழ்.மருத்துவ பீடத்துக்கு தெரிவு செய்துள்ளோம். அவர்களுக்கு அனுமதிக் கடிதங்களை அனுப்பியுள்ளோம். அவர்களின் விருப்பைக் கேட்டுள்ளோம்.

அவர்களின் விருப்புக் கடிதங்கள் கிடைத்தபின் சிங்கள, முஸ்லிம் மாணவர்களை அழைத்துக் கொண்டு நான் யாழ்ப்பாணம் நேரில் வரப் போகிறேன்.

அவர்களை துணைவேந்தரிடம் ஒப்படைத்து அவர்களுக்கான உணவு, இருப்பிட வசதி களை ஏற்பாடு செய்யவுள் ளேன்.

இந்த மாணவர்களின் அனுமதி தொடர்பாகவும் அவர்களுக்கு செய்ய வேண்டிய வசதிகள் குறித்தும் யாழ்.அரச அதிபருடனும் பேசியுள்ளேன். அதற்கு தமது பூரண ஆதரவை வழங்க அவர் விருப்பம் தெரிவித்துள்ளார்- என்றார்.

### சென்ற வருடம் அனுமதி மறுக்கப்பட்டவர்களுக்கு

கடந்த வருட பல்கலைக்கழக அனுமதியின் போது பாதிக்கப்பட்ட- மருத்துவத் துறைக்கு தெரிவாகத் தகுதி இருந்தும் அனுமதிக்கப்படாத-குடாநாட்டு மாணவர்கள் தாங்கள் செய்த மனுவில் உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புக் குறித்து அவரிடம் கேட்டபோது- நீதி மன்றத்தின் தீர்ப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அந்தத் தீர்ப்பின் பிரகாரம் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அவர்கள் பயில விரும்பும் மருத்துவ பீடத்துக்கு இந்த வருடம் அனுமதி வழங்கவுள்ளோம்.

அவர்களில் யாழ்.மருத்துவ பீடத்தில் மீள அனுமதி பெற இதுவரை தங்கள் விருப்பத்தை ஏழு மாணவர்கள் எமக்கு அறிவித்துள்ளனர். அனுமதி பெற விரும்பும் ஏனைய மாணவர்களும் எமக்குத் தெரியப்படுத்தினால் அவர்கள் விரும்பும் மருத்துவ பீடத்துக்கு அனுமதி வழங்குவோம்- என்றார் பேராசிரியர் காமினி சமரநாயக்கா.(அ-01)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.06.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org